# வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## TNPSC
## நடப்பு நிகழ்வுகள்

(A book for TNPSC Examination)

**ஜூன் 2024**

An ISO 9001: 2015 Institution | Providing Excellence Since 2011


**Head Office**

Old No. 52, New No. 1, 9th Street,
F Block, 1st Avenue Main Road, (Near Istha Siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600 102.
Phone: 044-2626 5326 | 98844 21666 | 98844 32666

Branches

**SALEM**
No. 189/1, Meyanoor Road,
Near ARRS Multiplex, (Near
Salem New Bus Stand),
Opp. Venkateshwara Complex,
Salem - 636 004.
**Ph: 0427-2330307 | 95001 22022**

**KOVAI**
No. 347, D.S. Complex
(3rd floor), Nehru Street,
Near Gandhipuram Central
Bus Stand, Ramnagar,
Kovai - 641 009.
**Ph: 75021 65390**

**MADURAI**
No. 199, Dharshini Tower,
1st Floor, Vaigai Colony,
Anna Nagar,
Madurai - 625 020.
**Ph: 91500 21999**
**91500 21998**

**TIRUNELVELI**
No. 58, IVY Towers, 3rd Floor,
Palayamkottai,
Near Palai Bus Stand,
(Next to Muthamil Hospital),
Tirunelveli - 627 002.
**Ph: 91500 10079**

**THANJAVUR**
Muthu Complex,
(Pantaloons Showroom Basement)
No. 243, Cauvery Nagar,
Opp. New Housing Unit,
Thanjavur - 613 005.
**Ph: 78711 69099 | 78715 71819**

**KOVILPATTI**
No. 15, Kathiresan Kovil Road,
Behind Kaliamman Temple,
Kovilpatti – 628 501.
**Ph: 90037 90335**
**81222 80685**

**THIRUCHENGODE**
Vivekananda Educational Institutions
Elayampalayam (Po),
Thiruchengode (Tk),
Namakkal (Dt) - 637205.
**Ph: 7845779908**

www. vetriias. com

# முகவுரை



**மு.சண்முகம்**

நிறுவனர்

வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## இயக்குநர் வாழ்த்து மடல்

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.**

பொருள்:

ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்த படியே செயல்புரிவதில் உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிப்பணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி, அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுப்படுத்தும் வகையில் நடத்தப்படும் அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

மு.சண்முகம்
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ் பயிற்சி நிறுவனம்

வெளியீட்டாளர்

வெற்றி சண்முகம் பப்ளிகேஷன்

எஃப்–பிளாக், புதிய எண். 1, 3–வது மாடி, 9–வது தெரு, 1–வது அவன்யூ பிராதான சாலை,

சிந்தாமணி, அண்ணாநகர் (கிழக்கு), சென்னை–600 102.

தொலைபேசி: 044–26265326

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# பொருளடக்கம்


## 1. வரலாறு

**முக்கிய தினங்கள்** 1

**பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்**

- தரங் சக்தி பயிற்சி

**உலக உச்சி மாநாடுகள் மற்றும் அமைப்பு**

- உலக சுகாதார மாநாடு
- பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் 2024
- G7 உச்சி மாநாடு
- G7 உச்சிமாநாட்டின் முக்கிய முடிவுகள்

**விருதுகள் மற்றும் கௌரவம்**

- சாகித்ய அகாடமி விருதுகள்

**நியமனங்கள்**

- IGCAR மையத்தின் புதிய இயக்குனர்
- பாலின உணர்திறன் மற்றும் உள் புகார் குழு
- புதிய ராணுவ தளபதி
- ஆந்திரப் பிரதேச முதல்வர்
- கடற்படையின் முதல் பெண் ஹெலிகாப்டர் பைலட்
- ஒடிசாவின் புதிய முதல்வர்
- அருணாச்சலத்தின் புதிய முதல்வர்
- முக்கிய அதிகாரிகள் நியமனம்
- சிக்கிமின் புதிய முதல்வர்
- தற்காலிக சபாநாயகர்
- மக்களவை சபாநாயகர்

## 2. அரசியல் அறிவியல்

**இந்தியாவின் வெளிநாட்டு உறவுகள்** 10

- iCET கூட்டம்

**பொது விழிப்புணர்வு மற்றும் பொதுக் கருத்து**

- நோட்டா
- புதிய அரசாங்கம்
- 18வது மக்களவை
- புதிய அரசாங்கம்

**மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசு திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்**

- Tele MANAS
- காசநோய் ஒழிப்பு
- பிரதமரின் கிசான் நிதியுதவி திட்டம்
- தேசிய சுகாதார உரிமைகோரல் பரிமாற்றத்தளம் (NHCX)

- நேபாளத்தில் ஜன் ஔஷதி கேந்திரங்கள்
- முக்யா மந்திரி நிஜுத் மொய்னா திட்டம்
- ஆழ்கடல் திட்டம்
- தேசிய தடய அறிவியல் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" (NFIES)

## 3. புவியியல்

**சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்** 15

- சூழலியல் அமைப்புகளின் சிவப்பு பட்டியல்
- நைட்ரஸ் ஆக்சைடு உமிழ்வுகள்
- மின் ஓட்ட (E–flow) கண்காணிப்பு அமைப்பு
- ஆசிய சிங்கங்கள்

## 4. பொருளாதாரம்

**அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்** 17

- ரிசர்வ் வங்கியின் ஆண்டு அறிக்கை 2023–24
- உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை
- உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீடு 2024

**இந்தியப் பொருளாதாரத்தின்**

- தற்போதைய போக்குகள்
- ஜிஎஸ்டி வரிவசூல்
- விரிவாக்க ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI)
- 100 மெட்ரிக் டன் தங்கம்
- ரெப்போ விகிதம்

## 5. அறிவியல்

**விண்வெளி** 20

- பிரவாஹா
- ஆதித்யா–எல்1

**சுகாதார அறிவியலில் சமீபத்திய கண்டுபிடிப்புகள்**

- செவ்வாய் கிரகத்தில் மூன்று புதிய பள்ளங்கள்

**அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்**

- ஆழ்கடல் திட்டம்

**தினசரி தேசிய நிகழ்வு** 22

- உலகின் மிகப்பெரிய தானியக் கையிருப்புத் திட்டம்
- டிஜிட்டல் பணம் செலுத்துதல் நுண்ணறிவு தளம்
- புதிய குற்றவியல் சட்டங்கள்
- மேற்கு வங்கத்தில் ரயில் விபத்து
- 14 காரிஃப் பயிர்களுக்கு MSP உயர்வு

- நாளந்தா பல்கலைக்கழகம்
- வாதவன் துறைமுகம்
- சங்கம்–டிஜிட்டல் இரட்டை முன்முயற்சி
- 'விரைவான இடப்பெயர்வு – நம்பகமான பயணிகள்' திட்டம் (FTI–TTP)
- கேரளம் என்று பெயர் மாற்றம்

**சர்வதேச நிகழ்வு** 25

- குவாண்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் சர்வதேச ஆண்டு
- நேட்டோவின் புதிய தலைவர்

**தமிழ்நாடு** 26

- மண் ஆணி திட்டம்
- நிலம் வாங்கும் திட்டம்
- இயற்கை பொருட்களுக்கான ஒருங்கிணைந்த சின்னம்
- தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர்
- டிஜியாத்ரா வசதி
- பள்ளி உள்கட்டமைப்பு
- மண் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் திட்டம்
- தமிழகத்தின் IGST வரிவசூல்
- தமிழ்ப் புதல்வன் திட்டம்
- மரகத பூஞ்சோலை முன்முயற்சி
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் புதிய இலச்சினை
- நாங்குநேரி சம்பவம்
- தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள்
- தேசிய மகளிர் ஆணையம் (NCW)
- முதல்வரின் தாயுமானவர் திட்டம்
- 'நடந்தாய் வாழி காவிரி' திட்டம்
- மக்காச்சோளம் சாகுபடி
- பெரும்பாலை அகழாய்வு
- தமிழ் மொழி தியாகிகள் தினம்
- பள்ளிக்கல்வித்துறை முன்னெடுப்புகள்
- தமிழகம் முழுவதும் முக்கிய பிரபலங்களின் சிலைகள்
- கள்ளக்குறிச்சி துயரச் சம்பவம்
- சாதிவாரி கணக்கெடுப்பு
- சுற்றுச்சூழல் தன்னார்வத் தொண்டுக்கான இணையதளம்
- ஓசூரில் புதிய சர்வதேச விமான நிலையம்
- தமிழ்நாடு திறன்–நிறைப்பள்ளிகள் முன்முயற்சி
- WE–SAFE திட்டம்
- தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், 1937
- ஸ்டார்ட்–அப்கள் பற்றிய அறிவிப்புகள்
- ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் (SUP) பொருட்கள்

# 1. வரலாறு





## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜூன் 1** | **உலக பால் தினம்** | ▪ உலகளாவிய உணவாக பாலின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க ஒவ்வொரு ஆண்டும் **ஜூன் 1** அன்று **உலக பால் தினம் 2024** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பால் (FAO) 2001 ஆம் ஆண்டு முதன்முதலில் இந்த தினம் அனுசரிக்கப்பட்டது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் : "Celebrating the vital role dairy plays in delivering quality nutrition to nourish the world".<br>குறிப்பு<br>▪ உலகில் பால் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளது. |
| **ஜூன் 2** | **தெலுங்கானா நிறுவன தினம்** | ▪ ஜூன் 2, 2014 அன்று தெலுங்கானா மாநிலம் உருவானதை நினைவுகூரும் வகையில் **ஜூன் 2 அன்று தெலுங்கானா நிறுவன தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ **இந்தியாவின் 29வது மாநிலமாக ஹைதராபாத்தைத் தலைநகராகக் கொண்டு** ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தெலுங்கானா உருவாக்கப்பட்டது.<br>குறிப்பு<br>▪ ஜூன் 2, 2024 அன்று '**ஜெய ஜெய ஹே தெலுங்கானா**' என்ற பாடல் தெலுங்கானா மாநில பாடலாக அறிவிக்கப்பட்டது.<br>▪ இந்த பாடலை எழுதியவர் **கவிஞர் ஆண்டே ஸ்ரீ** மற்றும் இசையமைத்தவர் **எம் எம் கீரவாணி** ஆவர். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜூன் 3** | **உலக மிதிவண்டி தினம்** | ▪ மிதிவண்டிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் **ஜூன் 3 ஆம் தேதி உலக மிதிவண்டி தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் : "Promoting Health, Equity, and Sustainability through Cycling."<br>▪ ஏப்ரல் 2018 இல் **ஐக்கிய தேசிய பொதுச்சபையால்** இந்த தினம் அனுசரிக்கப்பட்டது |
| **ஜூன் 5** | **உலக சுற்றுச்சூழல் தினம்** | ▪ சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் **ஜூன் 5 அன்று உலக சுற்றுச்சூழல் தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள்: Land restoration, desertification and drought resilience.<br>▪ இந்த தினம் முதன்முதலில் 1973 இல் **ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தால்** (UNEP) **கொண்டாடப்பட்டது.**<br>UNEP பற்றி<br>• உருவாக்கம் – ஜூன் 5, 1972<br>• தலைமையகம் – நைரோபி, கென்யா<br>• நிர்வாக இயக்குனர் – இங்கர் ஆண்டர்சன் |
| **ஜூன் 6** | **உலக பூச்சிகள் தினம்** | ▪ பூச்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் **ஜூன் 6ஆம் தேதி உலக பூச்சிகள் தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2017 இல் **பொது சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான பூச்சி மேலாண்மை சேவைகளின் உலகளாவிய உச்சி மாநாட்டால்** இந்த தினம் முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் : Global Solutions, Local Impact: Mapping Success in Pest Management.<br>குறிப்பு<br>▪ ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) என்பது பூச்சிகளைக் கட்டுப்படுத்த இரசாயன மற்றும் இரசாயனமற்ற நடைமுறைகளை ஒருங்கிணைக்கும் சூழல் நட்பு அணுகுமுறையாகும்.<br>▪ IPM பற்றிய தேசியக் கொள்கை 1985 இல் இந்தியாவில் வெளியிடப்பட்டது |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜூன் 6** | **உலக உணவு பாதுகாப்பு தினம்** | ▪ உணவு மூலம் பரவும் நோய் அபாயங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் **ஜூன் 7 அன்று உலக உணவு பாதுகாப்பு தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் : "Food safety: prepare for the unexpected."<br>▪ இந்த தினம் முதன்முதலில் டிசம்பர் 2018 இல் அனுசரிக்கப்பட்டது |
| **ஜூன் 8** | **உலக பெருங்கடல் தினம்** | ▪ கடலின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க ஒவ்வொரு ஆண்டும் **ஜூன் 8 ஆம் தேதி உலக பெருங்கடல் தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024 ம் ஆண்டிற்கான கருப்பொருள் : "Awaken New Depth"<br>▪ இந்த தினம் முதன்முதலில் 2008 இல் ஐக்கிய நாடுகள் சபையால் அனுசரிக்கப்பட்டது |
| **ஜூன் 12** | **உலக குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினம்** | ▪ குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஜூன் 12 அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் : Let's act on our commitments: End Child Labour!<br>▪ 1999 இல் இந்த தினம் சர்வதேச தொழிலாளர் அமைப்பால் (ILO) ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>குறிப்பு<br>▪ குழந்தைத் தொழிலாளர்களுக்கான தேசியக் கொள்கை 1987 இல் உருவாக்கப்பட்டது.<br>▪ குழந்தைத் தொழிலாளர் (தடை & ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம் 2016 அனைத்து வேலைகளிலும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை பணியமர்த்துவதைத் தடை செய்கிறது மேலும் இளம் பருவத்தினரை (14–18 வயது) அபாயகரமான தொழில்களில் பணியமர்த்துவதைத் தடை செய்கிறது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜூன் 17** | **பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்ப்பதற்கான சர்வதேச தினம்** | ▪ வருங்கால சந்ததியினருக்காக நில வளங்களை பாதுகாக்க கூட்டு நடவடிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க ஒவ்வொரு ஆண்டுதோறும் **ஜூன் 17** அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் – United for Land. Our Legacy. Our Future.<br>▪ 2007 ஆம் ஆண்டில், ஐநா 2010 முதல் 2020 வரையிலான பத்தாண்டுகளை ஐக்கிய நாடுகளின் பாலைவனங்களுக்கான தசாப்தம் மற்றும் பாலைவனமாக்கலுக்கு எதிரான போராட்டமாக அறிவித்தது. |
| **ஜூன் 17** | **உலக முதலை தினம்** | ▪ உலகம் முழுவதும் அழிந்து வரும் முதலைகள் மற்றும் முதலைகளின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 17 அன்று உலக முதலைகள் தினம் கொண்டாடப்படுகிறது.<br>▪ இந்தியாவில் மூன்று முதலை இனங்கள் உள்ளன<br>▪ உப்பு நீர் முதலை<br>▪ குவளை அல்லது சதுப்பு நில முதலை<br>▪ கேரியல்<br>▪ முதலை பாதுகாப்பு திட்டம் இந்தியாவில் முதன்முதலில் 1975 இல் ஒடிசாவின் பிடர்கனிகா தேசிய பூங்காவில் தொடங்கப்பட்டது.<br>▪ **இது ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம்** (UNDP) **மற்றும் ஐநாவின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு** (FAO) ஆகியவற்றின் உதவியுடன் தொடங்கப்பட்டது. |
| **ஜூன் 19** | **உலக கதிர் அரிவாள் ரத்தசோகை விழிப்புணர்வு தினம்** | ▪ கதிர் அரிவாள் ரத்தசோகை நோய் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க ஒவ்வொரு ஆண்டும் **ஜூன் 19 அன்று உலக கதிர் அரிவாள் ரத்தசோகை விழிப்புணர்வு தினம்** கொண்டாடப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் : Hope Through Progress: Advancing Sickle Cell Care Globally<br>▪ **தேசிய கதிர் அரிவாள் ரத்தசோகை ஒழிப்பு இயக்கம் 2047** ஆம் ஆண்டிற்குள் கதிர் அரிவாள் ரத்தசோகையை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜூன் 21** | **சர்வதேச யோகா தினம்** | ▪ யோகா பயிற்சியை கொண்டாட **ஜூன் 21 அன்று சர்வதேச யோகா தினம் அனுசரிக்கப்படுகிறது.**<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் : "Yoga for Self and Society."<br>▪ **இந்த தினம் முதன்முதலில் 2014 இல் ஐக்கிய நாடுகள் சபையால்** அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.<br>**குறிப்பு**<br>▪ **பதஞ்சலி** யோகாவின் தந்தை என்று புகழப்படுகிறார். |
| **ஜூன் 27** | **MSME தினம்** | ▪ உலகெங்கிலும் உள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு **ஜூன் 27 அன்று குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் : MSMEs and the SDGs<br>▪ **2017 இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால்** இந்த தினம் அறிவிக்கப்பட்டது<br>**குறிப்பு**<br>▪ 2015ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் அடையாளம் காணப்பட்ட **17 நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG) 2030க்குள்** அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

# 1.2 பாதுகாப்பு

## தரங் சக்தி பயிற்சி

- 'தரங் சக்தி-2024' பயிற்சி ஆகஸ்ட் 2024ல் நடைபெறும் என இந்திய விமானப்படை அறிவித்துள்ளது.
- **இது இந்திய விமானப்படையின் முதல் பன்னாட்டு விமானப் பயிற்சியாகும்**
- இந்த பயிற்சி **இரண்டு கட்டங்களாக** நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த பயிற்சி தென்னிந்தியாவில் நடைபெறும் என்று இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது.

**குறிப்பு**

- அலாஸ்காவில் அமெரிக்க விமானப்படை (USAF) நடத்திய செங்கொடி பயிற்சியில் இந்திய விமானப்படை சமீபத்தில் பங்கேற்றது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 1.3 உலக உச்சி மாநாடுகள் மற்றும் அமைப்பு

## உலக சுகாதார மாநாடு

- 77வது உலக சுகாதார மாநாடு **சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில்** சமீபத்தில் நடைபெற்றது.
- கருப்பொருள்: (All for Health, Health for All).
- உலக சுகாதார மாநாடு என்பது உலக சுகாதார அமைப்பின் முடிவெடுக்கும் அமைப்பாகும்.

WHO பற்றி

- உருவாக்கம் – 7 ஏப்ரல் 1948
- தலைமையகம் – ஜெனிவா
- இயக்குநர் ஜெனரல் – டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ்
- குறிக்கோள் – உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பை விரிவுபடுத்துதல்

## பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் 2024

- பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் 2024 **ரஷ்யாவின் நிஸ்னி நோவ்கோரோடில்** தொடங்கியது.
- புதிய வளர்ச்சி வங்கியை 21 ஆம் நூற்றாண்டின் ஒரு புதிய வகை பலதரப்பு மேம்பாட்டு வங்கியாக கூட்டாக உருவாக்க அமைச்சர்கள் ஒப்புக்கொண்டனர்.

BRICS பற்றி

- **உருவாக்கம் – ஜூன் 16, 2009**
- **தலைமை** – ரஷ்யா (ஜனவரி 1, 2024 முதல்)
- உறுப்பினர்கள் – 10
- **குறிக்கோள்** – உறுப்பு நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பையும் வர்த்தகத்தையும் மேம்படுத்துதல்

## G7 உச்சி மாநாடு

- G7 உச்சிமாநாடு **இத்தாலியில் உள்ள அபுலியாவில்** ஜூன் 13–15, 2024 அன்று நடைபெற்றது.
- G7 உச்சி மாநாட்டில் இந்தியா ஒரு பார்வையாளர் நாடாக பங்கேற்றது.
- உச்சிமாநாட்டின் போது விவாதிக்கப்பட்ட முக்கியமான தலைப்புகள் – செயற்கை நுண்ணறிவு, ஆற்றல், ஆப்பிரிக்கா மற்றும் மத்திய தரைக்கடல்.

G7 உச்சிமாநாட்டின் முக்கிய முடிவுகள்

- **G7 அபுலியா உணவு அமைப்பு முன்முயற்சி** (AFSI): உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான கட்டமைப்புத் தடைகளைக் கடக்க முயற்சிகளை தீவிரப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- **உலகளாவிய உள்கட்டமைப்பு முதலீட்டிற்கான கூட்டாண்மை** (PGII): இது வளரும் நாடுகளில் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கான கூட்டு முயற்சியாகும்.
- **இந்தியா–மத்திய கிழக்கு–ஐரோப்பா பொருளாதார வழித்தடம்** (IMEC) : சவுதி அரேபியா, இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா வழியாக IMEC அமைத்தல்.

G7 பற்றி

- முதல் உச்சி மாநாடு – 1975
- உறுப்பினர்கள் – இத்தாலி, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா. ஐரோப்பிய ஒன்றியமும் உச்சி மாநாட்டில் பங்கேற்கிறது
- குறிக்கோள் – 1973 ஆற்றல் நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையிலான பொருளாதார மற்றும் நிதி ஒத்துழைப்புக்கான தளமாகும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 1.4 விளையாட்டு

## பிரெஞ்ச் ஓபன்

- சமீபத்தில் நடைபெற்ற பிரெஞ்சு ஓபன் போட்டியில் **கார்லோஸ் அல்கராஸ்** பட்டம் வென்றார்.
- இவர் புல், கடினமான, களிமண் ஆகிய மூன்று பரப்புகளிலும் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற இளம் விளையாட்டு வீரரானார்.

பிரெஞ்சு ஓபன் பற்றி

- இது ரோலண்ட்–காரோஸ் என்றும் அழைக்கப்படுகிறது.
- தொடக்கம் – 1891.

# 1.5 விருதுகள் மற்றும் கௌரவம்

## சாகித்ய அகாடமி விருதுகள்

- சாகித்ய அகாடமி சமீபத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான யுவ புரஸ்கார் மற்றும் பால் சாகித்ய புரஸ்கார் வெற்றியாளர்களை அறிவித்தது.
- **லோகேஷ் ரகுராமன்** சிறுகதைகளின் தொகுப்பான **விஷ்ணு வந்தார்** என்ற புத்தகத்திற்காக யுவ புரஸ்கார் விருதைப் பெற்றார்.
- **யூமா** வாசுகி தனது **தன்வியின்** பிறந்தநாள் (கதைகள்) புத்தகத்திற்காக **பால் சாகித்ய புரஸ்கார்** விருதைப் பெற்றார்.

சாகித்ய அகாடமி விருதுகள் பற்றி

- ஞானபீட விருதுக்குப் பிறகு இரண்டாவது மிக உயர்ந்த இலக்கிய விருதாகும்.
- நிறுவப்பட்டது – மார்ச் 12, 1954 .
- இது இந்தியாவின் நேஷனல் அகாடமி ஆஃப் லெட்டர்ஸ் என்றும் அழைக்கப்படுகிறது
- தலைவர் – சந்திரசேகர கம்பரா

# 1.6 நியமனங்கள்

## IGCAR மையத்தின் புதிய இயக்குனர்

- இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் (IGCAR) புதிய இயக்குநராக **சந்திரசேகர் கவுரிநாத் கர்ஹாட்கர்** நியமிக்கப்பட்டுள்ளார்

IGCAR பற்றி

- உருவாக்கம் – 1971
- இது அணுசக்தி துறையின் கீழ் செயல்படுகிறது.
- இது பாபா அணு ஆராய்ச்சி மையத்திற்கு (BARC) பிறகு இரண்டாவது பெரிய அணு ஆராய்ச்சி மையமாகும்

## பாலின உணர்திறன் மற்றும் உள் புகார் குழு

- சமீபத்தில் உச்ச நீதிமன்றத்தின் பாலின உணர்திறன் மற்றும் உள் புகார் குழுவின் தலைவராக நீதிபதி ஹிமா கோஹ்லி நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய உச்ச நீதிமன்றத்தின் (தடுப்பு, தடை மற்றும் நிவர்த்தி) ஒழுங்குமுறைகள், 2013 இல் உள்ள பாலின உணர்வு மற்றும் பெண்களின் பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றின் கீழ் இந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம் Since 2011

- குழுவில் ஏழு உறுப்பினர்களுக்கு குறையாமலும் 13 உறுப்பினர்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

குறிப்பு

- இந்தியாவின் முதல் பெண் தலைமை நீதிபதியாக பதவியேற்க உள்ள நீதிபதி
- பி.வி. நாகரத்னாவும் இந்தக்குழுவின் உறுப்பினராக உள்ளார்.

**இந்திய உச்ச நீதிமன்றம் பற்றி**

- தொடக்கம் – ஜனவரி 28, 1950
- இந்திய அரசியலமைப்பின் 124 வது பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டது.
- உறுப்பினர்கள் – 34 (33+CJI)
- இந்திய தலைமை நீதிபதி – **தனஞ்சய ஒய். சந்திரசூட்**

## புதிய ராணுவ தளபதி

- **லெப்டினன்ட் ஜெனரல் உபேந்திர திவேதி,** ராணுவத்தின் அடுத்த தலைமைத் தளபதியாக சமீபத்தில் நியமிக்கப்பட்டார்.
- அவர் **அமைச்சரவையின் நியமனக் குழுவால்** (ACC) தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்

குறிப்பு

- இராணுவத் தளபதி உறுப்பினராக உள்ள குழுக்கள்
- பாதுகாப்பு கையகப்படுத்துதல் உறுப்பினர் குழு.
- பாதுகாப்பு திட்டமிடல் குழு
- தேசிய பாதுகாப்பு குழு

## ஆந்திரப் பிரதேச முதல்வர்

- தெலுங்கு தேசம் கட்சியின் (TDP) தலைவர் என். **சந்திரபாபு நாயுடு** ஆந்திரப் பிரதேசத்தின் புதிய முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

குறிப்பு

- 1996 மற்றும் 2014க்குப் பிறகு **மூன்றாவது முறையாக** ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சரானார்.
- **ஆந்திராவில் மிக நீண்ட காலம் முதல்வராக இருந்தவர்**

**ஆந்திரப் பிரதேசம் பற்றி**

- தலைநகரம் – அமராவதி
- முதல்வர் – என். சந்திரபாபு நாயுடு
- ஆளுநர் – எஸ்.அப்துல் நசீர்

## கடற்படையின் முதல் பெண் ஹெலிகாப்டர் பைலட்

- சப்–லெப்டினன்ட் **அனாமிகா பி.ராஜீவ்** இந்திய கடற்படையின் முதல் பெண் ஹெலிகாப்டர் பைலட் ஆனார்.

**இந்திய கடற்படை பற்றி**

- உருவாக்கம் – ஜனவரி 26, 1950.
- கடற்படைத் தலைவர் (CNS) – அட்மிரல் தினேஷ் கே திரிபாதி
- கடற்படை தினம் – டிசம்பர் 4.

## ஒடிசாவின் புதிய முதல்வர்

- ஒடிசாவின் **16வது முதல்வராக மோகன் சரண் மாஜி** பதவியேற்றார்.
- மறைந்த ஹேமானந்த் பிஸ்வால் மற்றும் கிரிதர் கமாங் ஆகியோருக்குப் பிறகு ஒடிசாவின் **மூன்றாவது பழங்குடியின முதல்வர்** ஆவார்.
- **இவர் ஒடிசாவின் முதல் பாஜக முதல்வர் ஆவார்.**

**ஒடிசா பற்றி**

- தலைநகரம் – புவனேஸ்வர்
- ஆளுநர் – ரகுபர் தாஸ்
- முதல்வர் – மோகன் சரண் மாஜி

## அருணாச்சலத்தின் புதிய முதல்வர்

- தொடர்ந்து மூன்றாவது முறையாக அருணாச்சல பிரதேச முதல்வராக **பெமா காண்டு** பதவியேற்றார்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- அவருக்கு **ஆளுநர் கே.டி. பர்நாயக்** பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

**அருணாச்சல பிரதேசம் பற்றி**

- தலைநகரம் – இட்டாநகர்
- முதல்வர் – பெமா காண்டு
- ஆளுநர் – கே.டி. பர்நாயக்

## முக்கிய அதிகாரிகள் நியமனம்

- இரண்டாவது முறையாக பிரதமரின் முதன்மை செயலாளராக **பி.கே. மிஸ்ரா** நியமிக்கப்பட்டார்.
- மூன்றாவது முறையாக தேசிய பாதுகாப்பு ஆலோசகராக (NSA) **அஜித் தோவல்** நியமிக்கப்பட்டார்.
- இவர்களின் நியமனங்களுக்கு பிரதமர் தலைமையிலான அமைச்சரவையின் நியமனக் குழு (ACC) ஒப்புதல் அளித்தது.

**குறிப்பு**

- முதன்மைச் செயலாளர் – பிரதமர் அலுவலகத்தின் நிர்வாகத் தலைவர் ஆவார்.
- NSA – தேசிய பாதுகாப்புக் கொள்கை மற்றும் சர்வதேச விவகாரங்களில் இந்தியப் பிரதமரின் தலைமை ஆலோசகர் ஆவார்.

## சிக்கிமின் புதிய முதல்வர்

- **பிரேம் சிங் தமாங்** தொடர்ந்து இரண்டாவது முறையாக சிக்கிம் மாநிலத்தின் முதலமைச்சராக பதவியேற்றார்.
- **இவர் சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சா** கட்சியின் தலைவராவார்.

**சிக்கிம் பற்றி**

- தலைநகர் – காங்டாக்
- ஆளுநர் – லக்ஷ்மண் ஆச்சார்யா.

## தற்காலிக சபாநாயகர்

- 18வது மக்களவையின் தற்காலிக சபாநாயகராக **பர்த்ருஹரி மஹ்தாப்** ஜனாதிபதி திரௌபதி முர்முவால் நியமிக்கப்பட்டார்.
- புதிய எம்.பி.க்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பது தற்காலிக சபாநாயகரின் முதன்மைக் கடமையாகும்.

**குறிப்பு**

- சபாநாயகர் தேர்தல் வரை சபாநாயகர் கடமைகளைச் செய்ய **அரசியலமைப்பின் 95 (1) வது பிரிவின் கீழ்** இந்த நியமனம் செய்யப்படுகிறது.
- **தற்கால சபாநாயகர்** பற்றி இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்**லை.**

## மக்களவை சபாநாயகர்

- சமீபத்தில் 18வது **மக்களவையின் சபாநாயகராக ஓம் பிர்லா** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- மக்களவையின் சபாநாயகர் மக்களவையால் அதன் உறுப்பினர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**குறிப்பு**

- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் அலுவலகங்கள் **1919 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின் விதிகளின் கீழ்** 1921 இல் இந்தியாவில் உருவாக்கப்பட்டன.
- மக்களவை சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகராக இரு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று **அரசியலமைப்பின் பிரிவு 93** கூறுகிறது.
- மத்திய சட்டமன்றத்தின் முதல் சபாநாயகர் – **ஃபிரடெரிக் வைட் (1921)**
- முதல் இந்தியர் மற்றும் மத்திய சட்டப் பேரவையின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகர் – **விட்டல்பாய் ஜே.படேல் (1925)**
- மக்களவையின் முதல் சபாநாயகர் – **ஜி.வி. மாவலங்கர் (1946)**

வெற்றி I.A.S. கல்வி மையம்
வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 இந்தியாவின் வெளிநாட்டு உறவுகள்

### iCET கூட்டம்

- இந்தியா–அமெரிக்கா இடையிலான **சிக்கலான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கான முன்முயற்சி** (iCET) உரையாடல் சமீபத்தில் புதுதில்லியில் நடைபெற்றது.
- இந்த கூட்டத்திற்கு இந்தியா மற்றும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் தலைமை தாங்கினர்.
- இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கியமான கனிமங்கள் மீதான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது தொடர்பான இருதரப்பு ஒப்பந்தத்துடன் இந்த சந்திப்பு முடிந்தது.

குறிப்பு

- ஒரு முக்கியமான கனிமமானது நவீன தொழில்நுட்பங்கள், பொருளாதாரங்கள் அல்லது தேசிய பாதுகாப்புக்கு அவசியமான ஒன்றாகும்.
- ஜூலை 2023 இல் இந்தியாவின் முக்கியமான 30 கனிமங்களின் பட்டியலை இந்தியா வெளியிட்டது.
- அமெரிக்கா பற்றி
  - **தலைநகர்** – வாஷிங்டன்.
  - **ஜனாதிபதி** – ஜோ பிடன்
  - **நாணயம்** – அமெரிக்க டாலர்

## 2.2 பொது விழிப்புணர்வு மற்றும் பொதுக் கருத்து

### நோட்டா

- **இந்தூர் மக்களவைத் தொகுதியில் 2 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் நோட்டாவுக்கு** பதிவாகியுள்ளன.
- இதுவரை நோட்டாவுக்கு பதிவான வாக்குகளிலேயே இதுதான் அதிகமாகும்.

குறிப்பு

- தொடக்கம் – செப்டம்பர் 2013.
- உச்ச நீதிமன்றம் நோட்டாவை அறிமுகப்படுத்த இந்திய தேர்தல் ஆணையத்திற்கு (ECI) உத்தரவிட்டது.
- ஒரு தொகுதியில் அதிக வாக்குகள் நோட்டாவிற்குப் பதிவானால், வெற்றி பெற்ற இரண்டாவது வேட்பாளர் வெற்றி பெறுவார்

### புதிய அரசாங்கம்

- தொடர்ந்து **மூன்றாவது முறையாக** புதிய அரசாங்கத்தை அமைக்க நரேந்திர மோடியை ஜனாதிபதி திரௌபதி முர்மு முறைப்படி அழைத்தார்.
- அவர் **தேசிய ஜனநாயகக் கூட்டணியின்** (NDA) **தலைவராகத்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

SUCCESS GUARANTEED
Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

முக்கிய சிறப்பம்சங்கள்

- தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) 543 இடங்களில் **293 இடங்களில்** வென்றுள்ளது.
    - பாஜக – 240 இடங்கள்
    - இந்திய தேசிய காங்கிரஸ் (INC) – 99 இடங்கள்
    - சமாஜ்வாதி கட்சி (SP) – 37 இடங்கள்
    - அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் (AITC) – 29 இடங்கள்.
- அரசாங்கத்தை அமைக்க **பெரும்பான்மையாக 272 இடங்கள் தேவை,** எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இடங்கள் கிடைக்கவில்லை
- NDA கூட்டணியானது தெலுங்கு தேசம் கட்சியின் (TDP) N. சந்திரபாபு நாயுடு மற்றும் பீகார் முதல்வரும் ஜனதா தளம் (ஐக்கிய) தலைவருமான நிதிஷ் குமார் ஆகியோரைக் கொண்டுள்ளது.
- **இந்தூர் மக்களவைத் தொகுதியில் 218674 பேர்** நோட்டாவுக்கு வாக்களித்துள்ளனர்.
- இந்த தேர்தலில் மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட மொத்த **பெண்களின் எண்ணிக்கை 74** மட்டுமே மேலும் பெண்கள் மக்களவையில் வெறும் 13.63% மட்டுமே உள்ளனர்.
- தலைமை தேர்தல் ஆணையத்தின் கூற்றுப்படி, இந்தியா 64.2 கோடி வாக்காளர்களுடன் உலக சாதனை படைத்துள்ளது, இதில் 31.2 கோடி பெண் வாக்காளர்கள் உள்ளனர்.
- இது அனைத்து G7 நாடுகளின் வாக்காளர்களை விட 1.5 மடங்கு அதிகமாகும்.

## 18வது மக்களவை

- 18வது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் **ஜூன் 24 முதல் ஜூலை 3 வரை** நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு அறிவித்தார்
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஜூன் 27 அன்று 86 மற்றும் 87வது பிரிவின் கீழ் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றுவார்.
- 18வது மக்களவையில் **280 முதல் முறை எம்.பி.க்கள் மற்றும் 74 பெண் எம்.பி.க்கள் உள்ளனர்.**

குறிப்பு

- **சட்டப்பிரிவு 86** குடியரசுத் தலைவருக்கு நாடாளுமன்றத்தின் அவையில் அல்லது அவையின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றும் உரிமையை வழங்குகிறது.
- **சட்டப்பிரிவு 87** இரண்டு நிகழ்வுகளில் இந்தியக் குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சிறப்பு உரையாற்றுவது பற்றி குறிப்பிடுகிறது.அவை
- ஒவ்வொரு வருடத்தின் முதல் அமர்வு தொடங்கும்போது
- ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பிறகு முதல் அமர்வு நடைபெறும் போது

## புதிய அரசாங்கம்

- நரேந்திர மோடி தொடர்ந்து **மூன்றாவது முறையாக** பிரதமராக பதவியேற்றார்.
- 71 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சர்கள் குழுவும் பதவியேற்றது.

குறிப்பு

- **ஜவஹர்லால் நேருவுக்குப்** பிறகு தொடர்ந்து மூன்றாவது முறையாக மத்தியில் ஆட்சி அமைக்கும் **இரண்டாவது பிரதமர் நரேந்திர மோடி** ஆவார்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **75வது பிரிவு,** பிரதமரை குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும் என்றும், மற்ற அமைச்சர்கள் பிரதமரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார்கள் என்றும் கூறுகிறது.

# 2.3 மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசு திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

## Tele MANAS

- Tele MANAS இன் சிறப்புப் பிரிவை இயக்குவதில் ஒத்துழைப்பை எளிதாக்குவதற்காக **சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம்** (MoHFW) மற்றும் **பாதுகாப்பு அமைச்சகங்களுக்கு** (MoD) இடையே **புரிந்துணர்வு ஒப்பந்தம்** (MoU) கையெழுத்தானது
- Tele MANAS என்பது மாநிலங்களுக்கு இடையேயான தொலை தொடர்பு மனநலம் சார்ந்த உதவி வழங்கீட்டு மற்றும் வலையமைப்பாகும்.

Tele MANAS பற்றி

- தொடக்கம் – அக்டோபர் 2022.
- செயல்படுத்தியது – சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் (MoHFW)
- குறிக்கோள் – தொலை தொடர்பு மனநலம் சார்ந்த சேவைகளை 24X7 நேரமும் இலவசமாக வழங்குதல்.
- இது தேசிய மனநலத் திட்டத்தின் (NMHP) கீழ் செயல்படுத்தப்பட்டது.
- இலவச உதவி எண் – 14416.

## காசநோய் ஒழிப்பு

- **2025 ஆம் ஆண்டுக்குள்** காசநோயை ஒழிக்க வேண்டும் என்ற இந்தியாவின் இலக்கில் தொய்வு ஏற்பட்டுள்ளது.
- சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, இந்தியா 50 ஆண்டுகளுக்கும் மேலாக காசநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது, இருப்பினும் இந்த நோய் நாட்டின் கடுமையான சுகாதார நெருக்கடியாக தொடர்கிறது.

குறிப்பு

- காசநோயால் ஒவ்வொரு ஆண்டும் 4,80,000 இந்தியர்கள் அல்லது ஒவ்வொரு நாளும் 1,400 நோயாளிகள் உயிரிழக்கின்றனர்.
- காசநோய் என்பது மைக்கோபாக்டீரியம் டியூபர்குலோசிஸ் என்ற பாக்டீரியா நோயாகும்.
- தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டமானது (NTEP) காசநோய் ஒழிப்பை விரைவுபடுத்த தேசிய மூலோபாயத் திட்டம் 2017–25 மூலம் வழிநடத்தப்படுகிறது.

## பிரதமரின் கிசான் நிதியுதவி திட்டம்

- பிரதமரின் கிசான் நிதியுதவி திட்டம் 17வது தவணையை மத்திய அரசு விடுவித்தது.
- இத்திட்டத்தின் மூலம் 9.3 கோடி விவசாயிகள் பயனடைவார்கள் மேலும் சுமார் ₹20,000 கோடி ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பிரதமரின் கிசான் நிதியுதவி திட்டம் பற்றி**

- தொடக்கம் – **பிப்ரவரி 24, 2019.**
- குறிக்கோள் – பல்வேறு உள்ளீடுகளை கொள்முதல் செய்வதில் விவசாயிகளின் நிதித்தேவைகளை நிரப்புதல்.
- நன்மை – **வருடத்திற்கு ரூ.6000/–** நிதியுதவி மூன்று சமமான நான்கு மாத தவணைகளில் வழங்கப்படுகிறது.

## தேசிய சுகாதார உரிமைகோரல் பரிமாற்றத்தளம் (NHCX)

- இது **தேசிய சுகாதார ஆணையத்தால்** உருவாக்கப்பட்ட டிஜிட்டல் சுகாதார உரிமைக்கோரல் தளமாகும்.
- இது தேசிய சுகாதார ஆணையம் (NHA) மற்றும் இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆகியவற்றால் கூட்டாக இயக்கப்படும்.
- குறிக்கோள் – சுகாதார மற்றும் சுகாதார காப்பீட்டு சுற்றுச்சூழல் அமைப்பில்

உள்ள பல்வேறு பங்குதாரர்களிடையே உரிமைகோரல்கள் தொடர்பான தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கான நுழைவாயிலாக பணியாற்றுதல்.

குறிப்பு

- ஆயுஷ்மான் பாரத் என்பது **தேசிய சுகாதாரக் கொள்கை 2017ன்** மூலம் தொடங்கப்பட்ட காப்பீட்டுத் திட்டமாகும்.
- இது உலகளாவிய சுகாதார உள்ளடக்கத்தை (UHC) அடைய தொடங்கப்பட்டது

## நேபாளத்தில் ஜன் ஔஷதி கேந்திரங்கள்

- தங்கள் நாட்டில் ஜன் ஔஷதி கேந்திராக்களை அமைக்க நேபாளம் இந்தியாவை அணுகியுள்ளது, இதன் மூலம் அவர்களின் குடிமக்கள் குறைந்த விலையில் இந்திய ஜெனரிக் மருந்துகளை வாங்கி பயனடைய முடியும்.
- 'ஜன் ஔஷதி திட்டத்தை' ஏற்றுக்கொண்ட முதல் வெளிநாடு **மொரீஷியஸ்** ஆகும்.

**பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷதி பரியோஜனா பற்றி**

- தொடக்கம் – **நவம்பர் 2008**
- தொடங்கியது – மருந்துத் துறை, இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம்
- குறிக்கோள் – **தரமான ஜெனரிக் மருந்துகளை மலிவு விலையில் வழங்குதல்.**
- இந்த மருந்துகள் பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷதி கேந்திராக்கள் (PMBJK) மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

## முக்யா மந்திரி நிஜுத் மொய்னா திட்டம்

- சமீபத்தில் அஸ்ஸாம் மாநில அரசு **முக்யா மந்திரி நிஜுத் மொய்னா** என்ற திட்டத்தை அறிவித்துள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் **11 ஆம் வகுப்பு, முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு மற்றும் முதலாம் ஆண்டு முதுகலை பட்டப்படிப்பு** ஆகியவற்றை அரசு நடத்தும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படும்.
- **இது மாணவிகளுக்கான நிதியுதவித் திட்டமாகும்,** இது அவர்களின் இளவயது திருமணங்களைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**அசாம் பற்றி**

- தலைநகரம் – திஸ்பூர்
- முதல்வர் – ஹிமந்த பிஸ்வா சர்மா
- ஆளுநர் – குலாப் சந்த் கட்டாரி

## ஆழ்கடல் திட்டம்

- அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் சீனாவுக்குப் பிறகு, **சொந்தமாக ஆழ்கடல் திட்டத்தைக் கொண்டிருக்கும் 6வது நாடாக இந்தியா மாறியது.**
- இந்தியாவின் ஆழ்கடல் திட்டத்தின் ஒரு பகுதியாக சமுத்ராயன் திட்டம் உருவாக்கப்பட்டது.

**ஆழ்கடல் திட்டம் பற்றி**

- குறிக்கோள் – கடலின் ஆழத்தை ஆராய்ந்து பயன்படுத்துதல்.
- முதன்மை முகமை – **பூமி அறிவியல் அமைச்சகம்** (MoES)
- சமுத்ராயன் திட்டம் மனிதர்களை ஆழ்கடலுக்கு அனுப்பும் இந்தியாவின் முதல் கடல் திட்டமாகும்.
- இந்த திட்டமானது **'மத்ஸ்யா 6000'** எனப்படும் ஆழ்கடல் நீரில் மூழ்கும் கருவியில் மேற்கொள்ளப்படும்.
- மத்ஸ்யா 6000 என்பது மூன்று நபர்களை நீர்மூழ்கிக் கப்பல் மூலம் கடலுக்கு அடியில் 6,000 மீட்டர் தூரத்திற்கு அனுப்பும் திட்டமாகும்.

- இந்த கப்பல் சென்னையின் **தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்தால்** (NIOT) உருவாக்கப்பட்டது.

## தேசிய தடய அறிவியல் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" (NFIES)

- சமீபத்தில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், 2024–25–ம் ஆண்டு முதல் 2028–29–ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ரூ.2254.43 கோடி மொத்த நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசின் சார்பில் **"தேசிய தடய அறிவியல் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்"** என்ற திட்டத்திற்கான முன்மொழிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இத்திட்டம் **உள்துறை அமைச்சகத்தால்** செயல்படுத்தப்படும்.
- இது ஒரு **மத்திய துறை திட்டமாகும்.**
- இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள கூறுகள்,
- நாட்டில் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழக வளாகங்களை உருவாக்குதல்.
- நாட்டில் மத்திய தடய அறிவியல் ஆய்வகங்களை நிறுவுதல்.
- தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தின் தில்லி வளாகத்தில் தற்போதுள்ள உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்

### சூழலியல் அமைப்புகளின் சிவப்பு பட்டியல்

- சமீபத்தில், "மாங்குரோவ் சூழலியல் அமைப்புகளின் சிவப்பு பட்டியலை" IUCN வெளியிட்டது.
- இது உலகெங்கிலும் உள்ள சதுப்புநில சூழலியல் அமைப்புகளின் முதல் உலகளாவிய மதிப்பீடு ஆகும்.

**முக்கிய கண்டுபிடிப்புகள்**

- சதுப்புநில சூழலியல் அமைப்புகள் **50% வீழ்ச்சியடையும்** அபாயத்தில் உள்ளன.
- **2050ம் ஆண்டிற்குள்** கடல் மட்ட உயர்வு காரணமாக சுமார் 7,065 கிமீ2 (5%) கூடுதலாக சதுப்புநிலங்கள் இழக்கப்படும் மற்றும் 23,672 கிமீ2 (16%) நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது.
- தமிழ்நாடு, இலங்கை மற்றும் மாலத்தீவுகளைச் சுற்றியுள்ள கடலோரப் பகுதிகளில் உள்ள சதுப்புநிலங்கள் 'அழியும் அபாயத்தில் உள்ளவை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறிப்பு**

- சதுப்பு நிலத்தை பாதுகாக்க தமிழ்நாடு வனத்துறை 20 **கிராம சதுப்புநில குழுக்களை** அமைத்துள்ளது.
- இந்திய அரசின் வன அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் சதுப்புநிலங்களின் அளவு 2001 இல் 23 சதுர கிலோமீட்டரிலிருந்து 2021 இல் 45 சதுர கி.மீ வரை இரட்டிப்பாகியுள்ளது.
- தமிழ்நாடு கடலோர மறுசீரமைப்பு இயக்கத்தின் கீழ் இதுவரை 25 சதுர கி.மீ பரப்பளவில் சதுப்புநில மீட்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

### நைட்ரஸ் ஆக்சைடு உமிழ்வுகள்

- எர்த் சிஸ்டம் சயின்ஸ் டேட்டா இதழில் வெளியிடப்பட்ட ஆய்வின்படி, **நைட்ரஸ் ஆக்சைடு** (N2O) உமிழ்வுகள் வெளியிடப்படுவதில் உலகின் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது.
- 2020ல் உலக அளவில் மனிதனால் உருவாக்கப்பட்ட உமிழ்வுகளில் கிட்டத்தட்ட **11% இந்தியாவில்** இருந்து வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த உமிழ்வுகளின் முக்கிய ஆதாரம் உர பயன்பாட்டிலிருந்து வருகிறது.
- கடந்த நான்கு தசாப்தங்களில் மனித நடவடிக்கைகளில் இருந்து வெளிவரும் N2O **உமிழ்வு 40% அதிகரித்துள்ளது.**

**குறிப்பு**

- N2O என்பது ஒரு **பசுமை இல்ல வாயு** ஆகும், இது கார்பன் டை ஆக்சைடை விட வளிமண்டலத்தை வெப்பமாக்குகிறது.

### மின் ஓட்ட (E-flow) கண்காணிப்பு அமைப்பு

- மத்திய ஜல் சக்தி அமைச்சகம் சமீபத்தில் **மின் ஓட்ட (E-flow) சுற்றுச்சூழல் கண்காணிப்பு** அமைப்பை அறிமுகப்படுத்தியது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- இது கங்கை, யமுனை மற்றும் அவற்றின் துணை நதிகளின் நீரின் தரத்தை நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் (STPs) செயல்திறனை சரிபார்க்க அனுமதிக்கிறது.
- **கங்கைக்கான தேசிய திட்டத்தின்** (NMCG) மூலம் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.
- இந்த அமைப்பு '**நமாமி கங்கா திட்டத்தின்**' செயல்பாடுகளையும் கண்காணிக்கிறது.

## குறிப்பு

- NMCG (2011) – தேசிய கங்கா கவுன்சிலின் அமலாக்கப் பிரிவாகும் (2016).
- 'நமாமி கங்கா திட்டம்' (ஜூன் 2014) – கங்கை நதியின் மாசுபாட்டைத் திறம்படக் குறைத்தல், பாதுகாத்தல் மற்றும் புத்துயிர் பெறுதல் ஆகிய இரட்டை நோக்கங்களைக் கொண்ட ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டமாகும்.

## ஆசிய சிங்கங்கள்

- குஜராத்தில் உள்ள வனத்துறை புள்ளி மான் மற்றும் சாம்பார் மான்களை **கிர் வனத்திலிருந்து பர்தா வனவிலங்கு சரணாலயத்திற்கு** (BWS) **இடமாற்றம்** செய்யத் தொடங்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது வனவிலங்கு சரணாலயத்தில் ஆசிய சிங்கங்களுக்கு தேவையான இரையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பர்தா வனவிலங்கு சரணாலயம் குஜராத்தில் கிர் வனத்திலிருந்து 100 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

### குறிப்பு

- ஆசிய சிங்கங்கள் கிர் வனவிலங்கு சரணாலயத்திலிருந்து பர்தா வனவிலங்கு சரணாலயத்திற்கு 2023 இல் இடமாற்றம் செய்யப்பட்டன.
- இந்தியாவில் இதுவரை கிர் வனவிலங்கு சரணாலயத்தில் மட்டுமே ஆசிய சிங்கங்கள் காணப்படுகின்றன.
- IUCN நிலை – பாதிக்கப்படக்கூடியது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRI IAS STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்



# 4. பொருளாதாரம்

## 4.1 அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### ரிசர்வ் வங்கியின் ஆண்டு அறிக்கை 2023–24

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) சமீபத்தில் 2023–24 ஆம் ஆண்டிற்கான தனது வருடாந்திர அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தது.
- இது இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934 இன் பிரிவு 53(2) இன் கீழ் வழங்கப்படுகிறது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- இந்திய ரூபாயின் (INR) சர்வதேசமயமாக்கலை ஊக்குவிப்பதற்கான செயல் திட்டங்களை வகுத்தல்
- 2022–23 இல் 7.0% ஆக இருந்த உண்மையான GDP வளர்ச்சி 2023–24 இல் 7.6% ஆக அதிகரித்துள்ளது.
- பணவியல் கொள்கைக் குழு (MPC) ரெப்போ விகிதத்தை மாற்றாமல் 6.50% ஆக வைத்திருந்தது.
- 2023–24 இல் INR 1.4% ஆக குறைந்துள்ளது.
- மார்ச் 2023 இல் நிதி உள்ளடக்க குறியீடு (FI–Index) 60.1 ஆக உள்ளது.

**ரிசர்வ் வங்கி பற்றி**

- உருவாக்கம் – 1 ஏப்ரல் 1935
- தலைமையகம் – மும்பை
- RBI கவர்னர் – சக்திகாந்த தாஸ்

### உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை

- உலக வங்கி சமீபத்தில் உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் அறிக்கையை வெளியிட்டது.
- நடப்பு நிதியாண்டு உட்பட அடுத்த மூன்று ஆண்டுகளில் 6.7 சதவீத நிலையான வளர்ச்சியைப் பதிவு செய்து, வேகமாக வளரும் பெரிய பொருளாதாரமாக இந்தியா இருக்கும் என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில், 2023 முதல் 2024 நிதியாண்டில் வளர்ச்சி 8.2 சதவீதமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**உலக வங்கி பற்றி**

- உருவாக்கம் – ஜூலை 1944
- தலைமையகம்– வாஷிங்டன்
- தலைவர் – அஜய் பங்கா

### உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீடு 2024

- உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீடு 2024 சமீபத்தில் உலகப் பொருளாதார மன்றத்தால் (WEF) வெளியிடப்பட்டது.
- இந்த குறியீட்டில் இந்தியா 129வது இடத்தில் உள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- ஐஸ்லாந்து முதல் இடத்தில் உள்ளது.
- சூடான் 146 வது இடத்தில் உள்ளது, இது குறியீட்டில் கடைசி தரநிலையாகும்.
- இடைநிலைக்கல்விச் சேர்க்கையின் அடிப்படையில் இந்தியா சிறந்த பாலின சமத்துவத்தைப் பெற்றுள்ளது.
- பெண்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவதில் இந்தியா உலகளவில் 65வது இடத்தில் உள்ளது.
- இந்தியா 2024 இல் பாலின இடைவெளியில் 64.1% பெற்றுள்ளது.

WEF பற்றி

- உருவாக்கம் – 24 ஜனவரி 1971
- தலைவர் – போர்ஜ் பிடெண்டே
- தலைமையகம் – சுவிட்சர்லாந்து

# 4.2 இந்தியப் பொருளாதாரத்தின் தற்போதைய போக்குகள்

## ஜிஎஸ்டி வரிவசூல்

- 2024ம் ஆண்டு மே மாத சரக்கு மற்றும் சேவை வரி (GST) ₹1.73 லட்சம் கோடி வசூலானதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இது ஏப்ரலில் ₹2.10 லட்சம் கோடிக்கும் குறைவாக இருந்தது, ஆனால் மே 2023ல் வசூலான ₹1.57 லட்சம் கோடியை விட அதிகமாகும்.
- 2025 நிதியாண்டில் மே மாதம் வரையிலான மொத்த ஜிஎஸ்டி வசூல் ₹3.83–லட்சம் கோடியாக இருக்கும், இது முந்தைய ஆண்டை விட **11.3% அதிகமாகும்.**
- இது உள்நாட்டு பரிவர்த்தனைகளில் அதிகப்படியான அதிகரிப்பு மற்றும் இறக்குமதியில் ஓரளவு அதிகரிப்பு ஆகியவற்றால் இயக்கப்படுகிறது.

ஜிஎஸ்டி பற்றி:

- தொடக்கம் – ஜூலை 1, 2017
- **அரசியலமைப்பு (101வது திருத்தம்) சட்டம் 2016** கீழ் ஏற்படுத்தப்பட்டது.
- மூன்று வகையான GST வரிகள் உள்ளன அவை, CGST (மத்திய) SGST (மாநிலம்) மற்றும் IGST (ஒருங்கிணைந்தவை)
- வரி அடுக்குகள் – **0%, 5%, 12%, 18%, 28%.**
- ஜிஎஸ்டி கவுன்சில் **விதி 279A** இன் கீழ் உருவாக்கப்பட்டது.

## விரிவாக்க ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI)

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) NPCI சர்வதேச கொடுப்பனவு கழகத்துடன் (NIPL) இணைந்து 2028–29 ஆம் ஆண்டுக்குள் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகத்தை (UPI) 20 நாடுகளுக்கு விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

UPIஐ ஏற்றுள்ள நாடுகள்

- பூட்டான்
- பிரான்ஸ் (மின்னணு வணிகம்)
- மொரிஷியஸ்
- நேபாளம்
- சிங்கப்பூர்
- இலங்கை
- UAE

ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI) பற்றி

- தொடக்கம் – ஏப்ரல் 11, 2016
- ஒரே மொபைல் பயன்பாட்டில் பல வங்கிக் கணக்குகளை இயக்கும் அமைப்பாகும்.
- தொடங்கியது – 21 உறுப்பினர் வங்கிகளுடன் தேசிய கொடுப்பனவு கழகம்

வெற்றி I.A.S. கல்வி மையம்

## 100 மெட்ரிக் டன் தங்கம்

- இந்தியா 2024 நிதியாண்டில் இங்கிலாந்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த **100 மெட்ரிக் டன்** தங்கத்தை உள்நாட்டு பெட்டகங்களுக்கு மாற்றியுள்ளது.
- 2024ம் நிதியாண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த தங்கம் 27.46 மெட்ரிக் டன்கள் அதிகரித்து 822 மெட்ரிக் டன்களாக உள்ளது.

குறிப்பு

- RBI ஆல் வெளியிடப்படும் அனைத்து ரூபாய் நோட்டுகளும் **RBI சட்டம், 1934 இன் பிரிவு 33** இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி தங்கம், அரசாங்கப் பத்திரங்கள் மற்றும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களாக சேமிக்கப்படுகின்றன.

## ரெப்போ விகிதம்

- பணவியல் கொள்கைக் குழு (MPC) **ரெப்போ விகிதத்தை 6.5 சதவீதமாக** தொடர்ந்து எட்டாவது முறையாக மாற்றாமல் வைத்துள்ளது.
- **பண அளிப்பை விரிவாக்கும்'** பணவியல் கொள்கை நிலைப்பாட்டை பராமரிக்கவும் MPC குழு முடிவு செய்துள்ளது.

MPC குழு பற்றி

- இந்தக்குழு திருத்தப்பட்ட RBI சட்டம், 1934 இன் பிரிவு 45ZB இன் கீழ் உருவாக்கப்பட்டது.
- MPCன் முதல் கூட்டம் – செப்டம்பர் 29, 2016.
- குறைவெண் – 4 உறுப்பினர்கள்
- உறுப்பினர்கள் – 6 (3 – RBI, 3 – மத்திய அரசு)
- தலைவர் – இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் (சக்திகாந்த தாஸ்)

குறிப்பு

- வணிக வங்கிகள் கடன் வாங்கும்போது **ரிசர்வ் வங்கி விதிக்கும் வட்டி விகிதம் ரெப்போ விகிதம்** எனப்படும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 5. அறிவியல்




## 5.1 விண்வெளி

### பிரவாஹா

- Parallel RANS Solver for Aerospace Vehicle Aero–thermo–dynamic Analysis (PraVaHa) என்ற மென்பொருளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) உருவாக்கியுள்ளது.
- PraVaHa மென்பொருள் ஏவுகணை வாகனங்களில் வெளிப்புற மற்றும் உள் ஓட்டங்களை உருவகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இஸ்ரோவின் **விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில்** (VSSC) உருவாக்கப்பட்டது.
- இது ககன்யான் திட்டத்தில் விரிவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### இஸ்ரோ பற்றி

- உருவாக்கம் – ஆகஸ்ட் 15, 1969
- தலைமையகம் – பெங்களூரு
- தலைவர் – எஸ்.சோமநாத்

### ஆதித்யா–எல்1

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சமீபத்தில் சூரிய புயலின் போது சூரியனின் படங்களையும் அதன் ஆற்றல்மிக்க செயல்பாடுகளையும் வெளியிட்டது.
- இந்தப் படங்களை **ஆதித்யா–எல்1** படம் பிடித்தது.

### ஆதித்யா பற்றி – L1

- தொடக்கம் – செப்டம்பர் 2, 2023.
- ஏவுகணை வாகனம் – பிஎஸ்எல்வி சி–57
- இந்தியாவின் முதல் சூரியனுக்கான திட்டமாகும்
- திட்ட இயக்குனர் – நிகர் ஷாஜி

## 5.2 சுகாதார அறிவியலில் சமீபத்திய கண்டுபிடிப்புகள்

### செவ்வாய் கிரகத்தில் மூன்று புதிய பள்ளங்கள்

- அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தின் (PRL) விஞ்ஞானிகள் செவ்வாய் கிரகத்தில் உள்ள **தர்சிஸ் எரிமலை** பகுதியில் மூன்று புதிய பள்ளங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
- மூன்று பள்ளங்கள் பின்வருமாறு பெயரிடப்பட்டுள்ளன,
- **லால் பள்ளம்**– புகழ்பெற்ற இந்திய புவி இயற்பியலாளர் மற்றும் PRL இன் இயக்குநரான தேவேந்திர லால் பெயரிடப்பட்டது.
- **முர்சன் பள்ளம்** – உத்தரபிரதேசத்தில் உள்ள ஒரு நகரத்தின் பெயரால் அழைக்கப்படுகிறது.
- **ஹில்சா பள்ளம்** – பீகாரில் உள்ள ஒரு நகரத்தின் பெயரால் அழைக்கப்படுகிறது.

# 5.3 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

## ஆழ்கடல் திட்டம்

- அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் சீனாவுக்குப் பிறகு, **சொந்தமாக ஆழ்கடல் திட்டத்தைக் கொண்டிருக்கும் 6வது நாடாக இந்தியா மாறியது.**
- இந்தியாவின் ஆழ்கடல் திட்டத்தின் ஒரு பகுதியாக சமுத்ராயன் திட்டம் உருவாக்கப்பட்டது.

**ஆழ்கடல் திட்டம் பற்றி**

- குறிக்கோள் – கடலின் ஆழத்தை ஆராய்ந்து பயன்படுத்துதல்.
- முதன்மை முகமை – **பூமி அறிவியல் அமைச்சகம்** (MoES)
- சமுத்ராயன் திட்டம் மனிதர்களை ஆழ்கடலுக்கு அனுப்பும் இந்தியாவின் முதல் கடல் திட்டமாகும்.
- இந்த திட்டமானது '**மத்ஸ்யா 6000**' எனப்படும் ஆழ்கடல் நீரில் மூழ்கும் கருவியில் மேற்கொள்ளப்படும்.
- மத்ஸ்யா 6000 என்பது மூன்று நபர்களை நீர்மூழ்கிக் கப்பல் மூலம் கடலுக்கு அடியில் 6,000 மீட்டர் தூரத்திற்கு அனுப்பும் திட்டமாகும்.
- இந்த கப்பல் சென்னையின் **தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்தால்** (NIOT) உருவாக்கப்பட்டது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## உலகின் மிகப்பெரிய தானியக் கையிருப்புத் திட்டம்

- உலகின் மிகப்பெரிய தானிய கையிருப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் (NLCC) முதல் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.
- இந்திய அரசாங்கத்தின் (GoI) பல்வேறு திட்டங்களை ஒன்றிணைப்பதன் மூலம் முதன்மை வேளாண்மைக் கடன் சங்கத்தை (PACS) பல்சேவைச் சங்கங்களாக மாற்றுவதை இந்தத் திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது.
    - வேளாண் உள்கட்டமைப்பு நிதியம் (AIF)
    - வேளாண் சந்தைப்படுத்தல் உள்கட்டமைப்பு திட்டம் (AMI)
    - வேளாண் இயந்திரமயமாக்கலுக்கான துணைத் திட்டம் (SMAM)
    - பிரதமரின் உணவு பதப்படுத்துதல் குறு நிறுவனங்கள் முறைப்படுத்துதல் திட்டம் (PM-FME)

**தானிய சேமிப்பு திட்டம் பற்றி**

- 2023 இல் 11 மாநிலங்களில் ஒரு முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- செயல்படுத்தும் நிறுவனம் – **தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (NCDC)**
- குறிக்கோள் – இந்தியாவில் உணவு தானிய சேமிப்பு திறன் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல்

## மெக்சிகோ அதிபர்

- மெக்சிகோவின் முதல் பெண் அதிபராக சமீபத்தில் **கிளாடியா ஷீன்பாம்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 2018 இல் அவர் மெக்சிகோ நகரத்தின் முதல் பெண் மேயரானார்.

**மெக்ஸிகோ பற்றி**

- தலைநகரம் – மெக்சிகோ நகரம்
- நாணயம் – மெக்சிகன் பெசோ

## டிஜிட்டல் பணம் செலுத்துதல் நுண்ணறிவு தளம்

- **இந்திய ரிசர்வ் வங்கி (RBI) டிஜிட்டல் பணம் செலுத்துதல் நுண்ணறிவு தளத்தை நிறுவ** முன்மொழிந்துள்ளது.
- டிஜிட்டல் பணம் செலுத்துதல் முறையில் மோசடிகள் அதிகரித்து வரும் நிகழ்வுகளைக் கையாள, இந்த தளம் வலையமைப்பு நிலை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் பணம் செலுத்துதல் சுற்றுச்சூழல் அமைப்பு முழுவதும் நிகழ்நேர தரவுப் பகிர்வை வழங்கும்.

**ரிசர்வ் வங்கி பற்றி**

- உருவாக்கம் – ஏப்ரல் 1, 1935.
- தலைமையகம் – மும்பை.
- கவர்னர் – சக்திகாந்த தாஸ்

## புதிய குற்றவியல் சட்டங்கள்

- புதிய குற்றவியல் சட்டங்கள் ஜூலை 1ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்துள்ளார்.
- புதிய குற்றவியல் சட்டங்கள் பின்வருமாறு
    - பாரதிய நியாய சன்ஹிதா – இந்திய தண்டனைச் சட்டம், 1860
    - பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா – குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1898

வெற்றி I.A.S. கல்வி மையம்

- **பாரதிய சாக்ஷ்ய அதினியம்** – இந்திய சாட்சியச் சட்டம்

- 1872 இந்த சட்டங்கள் குற்றவியல் நீதி அமைப்பை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## மேற்கு வங்கத்தில் ரயில் விபத்து

- மேற்கு வங்க மாநிலம் **ரங்கபாணி** என்ற இடத்தில் கஞ்சன்ஜங்கா எக்ஸ்பிரஸ் பயணிகள் ரயிலின் பின்புறம் சரக்கு ரயில் மோதி விபத்துக்குள்ளானது.
- இந்தப் பிராந்தியத்தின் ரயில் வலையமைப்பில் **கவாச் ரயில் பாதுகாப்பு அமைப்பு** நிறுவப்படவில்லை.

**கவாச் அமைப்பு பற்றி**

- இது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட **தானியங்கி ரயில் பாதுகாப்பு (ATP)** அமைப்பாகும்.
- இது இந்திய ரயில்வேயின் (IR) கீழ் உள்ள **ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தரநிலை அமைப்பால் (RDSO)** உருவாக்கப்பட்டது.
- லோகோ பைலட் வேகத்தை கட்டுப்படுத்தத் தவறினால், தானாகவே பிரேக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் இது ரயிலின் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறது.

## 14 காரிஃப் பயிர்களுக்கு MSP உயர்வு

- மத்திய அமைச்சரவை சமீபத்தில் 2024–25 ஆம் ஆண்டுக்கான **14 வகையான காரிஃப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) உயர்த்தியுள்ளது.**
- எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகளுக்கு அதிகபட்ச MSP பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- சராசரி உற்பத்தி செலவில் குறைந்தபட்சம் **1.5 மடங்கு** MSP நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- சமீப ஆண்டுகளில், அரசாங்கம் பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள், மற்றும் ஊட்டச்சத்து தானியங்கள்/ ஸ்ரீ அன்னா போன்ற தானியங்களைத் தவிர மற்ற பயிர்களின் சாகுபடியை ஊக்குவித்து வருகிறது.

**MSP பற்றி**

- 14 காரிஃப் பயிர்கள், 6 ராபி பயிர்கள் மற்றும் இரண்டு வணிகப் பயிர்கள் உள்ளிட்ட 22 பயிர்களுக்கு MSP கட்டாயம்
- காரீஃப் பயிர்கள் – நெல், சோளம் , கம்பு , ராகி, துவரம் பருப்பு , பாசி பருப்பு , உளுந்தம் பருப்பு, பருத்தி, நிலக்கடலை, சூரியகாந்தி விதை, சோயாபீன், எள் மற்றும் ஆழி விதை
- விவசாய செலவுகள் மற்றும் விலைகளுக்கான ஆணையத்தின் (CACP) பரிந்துரைகளின் அடிப்படையில் MSP நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## நாளந்தா பல்கலைக்கழகம்

- நாளந்தா பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தை **பீகாரில் உள்ள ராஜ்கிரில்** பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் திறந்து வைத்தார்.
- இது ஒரு சர்வதேச பல்கலைக்கழகமாகும், இது நாளந்தாவின் பழங்கால இடிபாடுகளின் இடத்திற்கு அருகில் அமைந்துள்ளது.
- நாளந்தா இந்தியாவின் கல்வி பாரம்பரியம் மற்றும் கலாச்சார பரிமாற்றத்தின் சின்னமாகும்.
- இது நாளந்தா பல்கலைக்கழக சட்டம், 2010 மூலம் நிறுவப்பட்டது.
- 2007 இல் பிலிப்பைன்ஸில் நடைபெற்ற கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் நாளந்தாவை நிறுவும் யோசனை முன்வைக்கப்பட்டது.
- நாளந்தா பல்கலைக்கழகத்தின் வேந்தர் – அரவிந்த் பனகாரியா.

**குறிப்பு**

- நாளந்தா பல்கலைக்கழகம் **கி.மு. 5 ஆம் நூற்றாண்டில்** குப்த வம்சத்தைச் சேர்ந்த குமாரகுப்தாவால் கட்டப்பட்டது.
- இது 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் **பக்தியார் கில்ஜியால்** அழிக்கப்பட்டது.

## வாதவன் துறைமுகம்

- **மகாராஷ்டிராவின் தகானு** அருகே வாதவனில் பெரிய துறைமுகம் ஒன்றை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011

- இது **அனைத்து வானிலைக்குமான பெரிய பசுமை துறைமுகமாக** உருவாக்கப்படும்.
- இந்த துறைமுகம் முடிந்ததும் உலகின் முதல் 10 துறைமுகங்களில் ஒன்றாக இருக்கும்.
- இந்த துறைமுகம் **பிரதமரின் கதி சக்தி பெருந்திட்டத்தின்** (PMGS–NMP) ஒரு பகுதியாக கட்டப்பட உள்ளது.

PMGS–NMP பற்றி

- **தொடக்கம்** – அக்டோபர் 13, 2021
- **குறிக்கோள்** – இரயில்வே, சாலைகள், துறைமுகங்கள், நீர்வழிகள், விமான நிலையங்கள், வெகுஜனப் போக்குவரத்து, தளவாட உள்கட்டமைப்பு உள்ளிட்ட ஏழு கவனம் செலுத்தும் பகுதிகளுடன் பல்வேறு பொருளாதார மண்டலங்களுக்கு பல்நோக்கு முனையங்கள் இணைப்பு உள்கட்டமைப்பை வழங்குதல்

## சங்கம்–டிஜிட்டல் இரட்டை முன்முயற்சி

- தொலைத்தொடர்பு துறையானது சங்கம்–டிஜிட்டல் இரட்டை முன்முயற்சியின் முதல் வலையமைப்பு நிகழ்வை ஐஐடி டெல்லியில் நடத்தியது.

**சங்கம்–டிஜிட்டல் இரட்டை முன்முயற்சி பற்றி**

- தொடக்கம் – பிப்ரவரி 15, 2024
- டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் தரவுகளின் "டிஜிட்டல் இரட்டை" ஒன்றை ஒருங்கிணைப்பதன் மூலம் உள்கட்டமைப்பு திட்டமிடல் மற்றும் வடிவமைப்பை மாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குறிக்கோள் – பயன்பாட்டு மதிப்பை மேம்படுத்துதல், வளப் பயன்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் பயனுள்ள தரவு ஒருங்கிணைப்பு மூலம் செலவுகளைக் குறைத்தல்.

## 'விரைவான இடப்பெயர்வு – நம்பகமான பயணிகள்' திட்டம் (FTI–TTP)

- புதுதில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தின் **'விரைவான இடப்பெயர்வு – நம்பகமான பயணிகள்'** (Fast Track Immigration – Trusted Traveller Programme– FTI–TTP – **எஃப்டிஐ–டிடிபி**) என்ற திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தொடங்கி வைத்தார்.
- குடியேற்ற கவுன்டர்களில் நெரிசலைக் குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- புதுடெல்லி தவிர, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத், கொச்சி மற்றும் அகமதாபாத் விமான நிலையங்களில் முதல் கட்டமாக இந்த முயற்சி தொடங்கப்பட்டது.
- இது ஆன்லைன் போர்ட்டல் மூலம் செயல்படுத்தப்படும்.
- முதன்மை முகமை – **குடியேற்றப் பணியகம்**

## கேரளம் என்று பெயர் மாற்றம்

- மாநிலத்தின் பெயரை 'கேரளம்' என மாற்றுவதற்கான அரசியலமைப்பு திருத்தத்தை முன்மொழிந்து கேரள சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியது.
- முதல் அட்டவணையில் இந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்த **அரசியலமைப்பின் 3 வது பிரிவை** செயல்படுத்த இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறிப்பு

- **இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 3வது பிரிவு** புதிய மாநிலங்களை உருவாக்குதல் மற்றும் தற்போதுள்ள மாநிலங்களின் பகுதிகள், எல்லைகள் அல்லது பெயர்களை மாற்றுவது பற்றிக் கூறுகிறது.

# 7 சர்வதேச நிகழ்வு



## குவாண்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் சர்வதேச ஆண்டு

- 2025ஆம் ஆண்டு 'குவாண்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் சர்வதேச ஆண்டாக' அறிவிக்கப்படும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.
- குவாண்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கு **வெர்னர் ஹைசன்பெர்க்** அடிக்கல் நாட்டினார்.

**ஐக்கிய நாடுகள் சபை பற்றி**

- தலைமையகம் – நியூயார்க்
- நிறுவப்பட்டது – 1945

## நேட்டோவின் புதிய தலைவர்

- நேட்டோவின் பொதுச் செயலாளராக **மார்க் ரூட்டே** பதவியேற்க உள்ளார்.
- இவர் முன்பு நெதர்லாந்தின் பிரதமராக இருந்தார்.

**வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO) பற்றி**

- **உருவாக்கம்** – ஏப்ரல் 4, 1949
- **உறுப்பினர்கள்** – 32 நாடுகள்
- **தலைமையகம்** – பிரஸ்ஸல்ஸ், பெல்ஜியம்

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 8 தமிழ்நாடு



## மண் ஆணி திட்டம்

- நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவைத் தடுக்க மண் ஆணிகள் அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு சமீபத்தில் தொடங்கியது.
- இத்திட்டத்தின் கீழ், நீலகிரியில் **'மண் ஆணியிடல்'** மற்றும் **'ஹைட்ரோ சீடிங்'** தொழில் நுட்பங்கள் மூலம் சாய்வுத் தளத்தை வலுப்படுத்த செயல்படுத்தப்படுகிறது.
- இது வழக்கமான முறைகளுடன் ஒப்பிடும் போது, கட்டுமான செலவை **50% குறைக்கும்.**

## நிலம் வாங்கும் திட்டம்

- 2023ம் ஆண்டில் **தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) நிலம் வாங்கும் திட்டத்தில்** பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த மொத்தம் 191 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

நிலம் வாங்கும் திட்டம் பற்றி

- தொடக்கம் – 2004
- குறிக்கோள் – SC மற்றும் ST சமூகங்களைச் சேர்ந்த நிலமற்ற தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துதல்.
- பயனாளிகள் – **18–55 வயதுக்குட்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள SC/ST பெண்கள்**

## இயற்கை பொருட்களுக்கான ஒருங்கிணைந்த சின்னம்

- இந்தியாவில் **இயற்கை பொருட்களுக்கான ஒருங்கிணைந்த சின்னம்** சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது **இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) மற்றும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA)** ஆகியவற்றால் கூட்டாக உருவாக்கப்பட்டது.
- தற்போது,
  - இயற்கை பொருட்களுக்கான தேசிய திட்டத்துடன் (NPOP) இணங்கும் இயற்கை பொருட்களில் இந்த சின்னம் பயன்படுத்தப்படுகிறது.
  - FSSAI சான்றளிக்கப்பட்ட இயற்கை பொருட்களில் ஜெய்விக் பாரத் சின்னம் பயன்படுத்தப்படுகிறது.
- இயற்கை பொருட்களுக்கான ஒருங்கிணைந்த சின்னமானது இந்திய இயற்கை மற்றும் ஜெய்விக் பாரத் சின்னங்களுக்கு மாற்றாக இருக்கும்.

FSSAI பற்றி

- உருவாக்கம் – செப்டம்பர் 5, 2008.
- தலைமையகம் – புது தில்லி
- **உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம், 2006–ன் கீழ் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்**
- **சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.**

APEDA பற்றி

- உருவாக்கம் – பிப்ரவரி 13, 1986
  - தலைவர் – டாக்டர்.அபிசேக் தேவ்
  - புதிய காய்கறிகள் மற்றும் பழங்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் ஒரு முதன்மையான அமைப்பாகும்

வெற்றி I.A.S. கல்வி மையம்

## தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர்

- பல்வேறு துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடத்துவதற்காக தமிழக சட்டப்பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் ஜூன் 24ஆம் தேதி தொடங்கும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- **"மானியக்கோரிக்கை"** என்பது அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சகங்கள் அல்லது துறைகளால் எழுப்பப்படும் நிதிக்கான முறையான கோரிக்கையாகும்.

குறிப்பு

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **203 வது** பிரிவு ஆளுநரின் பரிந்துரையின்றி மானியக்கோரிக்கை எழுப்ப முடியாது என்று கூறுகிறது.

## டிஜியாத்ரா வசதி

- சென்னை விமான நிலையத்தில் **டிஜியாத்ரா வசதி** தொடங்கப்பட்டது.
- இது ஏற்கனவே இந்தியாவில் உள்ள மற்ற விமான நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

டிஜியாத்ரா வசதி பற்றி

- **தொடக்கம்** – டிசம்பர் 1, 2022.
- **குறிக்கோள்** – விமானப் பயணிகளுக்கு சிரமமில்லாத பயண அனுபவத்தை வழங்குதல்.
- **தொடங்கப்பட்டது** – சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் மற்றும் டிஜியாத்ரா அறக்கட்டளை.

## பள்ளி உள்கட்டமைப்பு

- தமிழகம் முழுவதும் 20,000 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகளும், 6,992 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் உயர்தர ஆய்வகங்களும் அமைக்கப்படும் என தொடக்கக் கல்வி இயக்குநர் (DEE) தெரிவித்துள்ளார்.
- 2024–25 ஆம் கல்வியாண்டில், **பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்** மாநிலம் முழுவதும் உள்ள 794 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1,920 கூடுதல் வகுப்பறைகள், 251 ஆய்வகங்கள், 692 ஆண்களுக்கான கழிப்பறைகள், 646 பெண்களுக்கான கழிப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டப்படும் என்று தொடக்கக் கல்வி இயக்குநர் (DEE) தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் பற்றி

- தொடக்கம் – 2023
- குறிக்கோள் – கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகளுக்கு உகந்த சூழலை வழங்குவதற்காக பள்ளிகளில் உள்கட்டமைப்பு மேம்பாட்டை வழங்குதல்.

## மண் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் திட்டம்

- **முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்** திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- **நோக்கம்** – மண்ணின் தரத்தை மேம்படுத்தி, சமூகத்தின் நல்வாழ்வுக்காக நிலையான மற்றும் இரசாயனமற்ற விவசாய நடைமுறைகளை நோக்கி நகர்த்துதல்.
- இத்திட்டம் **ரூ.206 கோடி** மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.
- பசுந்தாள் உரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மண் வளத்தைப் பாதுகாக்க ₹20 கோடி ஒதுக்கப்படும்.
- 2024–25 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக, சுமார் **2 லட்சம் ஏக்கர்** பரப்பளவில் **2 லட்சம் விவசாயிகளுக்கு** பசுந்தாள் உர விதைகள் விநியோகிக்கப்படும்

## தமிழகத்தின் IGST வரிவசூல்

- ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரியின் (IGST) கீழ் ₹1,523.95 கோடியை தமிழகம் வசூலிக்க வணிக வரித்துறையால் அமைக்கப்பட்ட **வரி ஆராய்ச்சிப் பிரிவு** உதவியுள்ளது.

- IGST என்பது மாநிலங்களுக்கு இடையேயான சரக்குகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் மத்திய அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது மேலும் மாநிலங்களுடன் வரிப்பகிர்வு செய்யப்படுகிறது.

**வரி ஆராய்ச்சி பிரிவு பற்றி**

- தொடக்கம் – **டிசம்பர் 30, 2022.**
- குறிக்கோள் – வருவாய் போக்கை ஆய்வு செய்து, வருவாயை பெருக்க நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்.

**ஜிஎஸ்டி பற்றி:**

- தொடக்கம் – **ஜூலை 1, 2017**
- அரசியலமைப்பு (**101வது திருத்தம்**) சட்டம் 2016 கீழ் உருவாக்கப்பட்டது .
- மூன்று வகையான ஜிஎஸ்டிகள் உள்ளன.அவை, CGST (மத்திய) SGST (மாநிலம்) மற்றும் IGST (ஒருங்கிணைந்தவை)
- வரி அடுக்குகள் – **0%, 5%, 12%, 18%, 28%.**
- ஜிஎஸ்டி கவுன்சில் பிரிவு **279A இன் கீழ்** உருவாக்கப்பட்டது.

## தமிழ்ப் புதல்வன் திட்டம்

- 2024 ஆகஸ்ட் மாதம் **தமிழ்ப் புதல்வன் திட்டம்** தொடங்கப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- குறிக்கோள் – பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களிடையே உயர்கல்வியை ஊக்குவித்தல்.
- பலன் – அரசு நடத்தும் பள்ளிகளில் **ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை** படித்த பிறகு உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ₹1,000 நிதியுதவி வழங்கப்படும்.

## மரகத பூஞ்சோலை முன்முயற்சி

- தமிழ்நாடு அரசு மாநிலம் முழுவதும் 100 கிராமங்களில் '**மரகத பூஞ்சோலையை**' அமைக்கத் தொடங்கியுள்ளது.
- சமீபத்தில் தமிழ்நாடு வனத்துறை விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஐந்து கிராமங்களில் 'மரகத பூஞ்சோலையை' உருவாக்கியுள்ளது.
- குறிக்கோள் – பசுமைப் பரப்பை அதிகரிப்பது மற்றும் சமூகத்தால் இயக்கப்படும் இயற்கை வளங்களின் மூலம் உள்ளூர்வாசிகளின் கிராமப்புற வாழ்வாதாரத்தை ஆதரித்தல்.

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் புதிய இலச்சினை

- திருப்பூரில் நடைபெற்ற '**கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்**' வழங்கும் நிகழ்ச்சியின் போது, **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்** (SDAT) புதிய **இலச்சினையை** இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார்.

**குறிப்பு**

- SDAT என்பது தமிழ்நாட்டின் அதிகாரப்பூர்வ விளையாட்டை மேம்படுத்தும் அமைப்பாகும், இது மாநிலம் முழுவதும் விளையாட்டு மற்றும் உடல் தகுதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 'கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்' வழங்கும் திட்டத்தின் கீழ், முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் பிறந்தநாளை முன்னிட்டு **12,000 கிராம ஊராட்சிகளில் விளையாட்டு உபகரணங்கள் விநியோகிக்கப்படும்.**

## நாங்குநேரி சம்பவம்

- ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு தலைமையிலான ஒருநபர் குழு தனது பரிந்துரைகளை தமிழக அரசிடம் சமர்ப்பித்துள்ளது.
- பள்ளிகளில் மாணவர்கள் தங்கள் சாதியைக் குறிக்கும் வகையில் கைகளில் அணியும் காப்பு, மோதிரங்கள் அல்லது நெற்றியில் குறிகளை இடுவதை தமிழக அரசு தடை செய்ய வேண்டும் என்று இந்தக் குழு பரிந்துரைத்தது.

வெற்றி I.A.S. கல்வி மையம் Since 2011

- பள்ளிகளின் பெயர்களில் உள்ள ஜாதி குறியீடுகளை நீக்கவும் இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது.

குறிப்பு

- ஆகஸ்ட் 2023 இல் திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரியில் நடந்த ஒரு சம்பவத்தை அடுத்து இந்தக் குழு அமைக்கப்பட்டது.

## தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள்

- முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழகம் முழுவதும் எட்டு இடங்களில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளை தொடங்கி வைத்தார்.
- பெரும்பாலை அகழ்வாராய்ச்சியின் கண்டு பிடிப்புகள் மற்றும் தமிழ்நாடு கல்வெட்டுகள் தொகுதி XXVIII பற்றிய அறிக்கையையும் முதலமைச்சர் வெளியிட்டார்.
- எட்டு தளங்கள்
  - கீழடி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் (கொந்தகை), சிவகங்கை
  - வெம்பக்கோட்டை, விருதுநகர்
  - கீழ்நமண்டி, திருவண்ணாமலை
  - பொற்பனைக்கோட்டை, புதுக்கோட்டை
  - திருமலாபுரம், தென்காசி
  - சென்னானூர், கிருஷ்ணகிரி
  - கொங்கல்நகரம், திருப்பூர்
  - மருங்கூர், கடலூர்

## தேசிய மகளிர் ஆணையம் (NCW)

- தேசிய மகளிர் ஆணையம் (NCW) **2024ல் 12,600 புகார்களைப்** பெற்றுள்ளது.
- தேசிய மகளிர் ஆணையத்தால் (NCW) இந்த ஆண்டு இதுவரை **உத்தரப் பிரதேசத்தில்** இருந்து (6,492) அதிக புகார்கள் வந்துள்ளன, அதைத் தொடர்ந்து டெல்லி (1,119) மற்றும் பின்னர் மகாராஷ்டிராவிலிருந்து (764) புகார்கள் வந்துள்ளன
- 2024ல் தமிழ்நாட்டிலிருந்து **304 புகார்கள்** பெறப்பட்டுள்ளது.
- குடும்ப வன்முறையைத் தவிர மற்ற துன்புறுத்தல்களை உள்ளடக்கிய **"கண்ணியத்திற்கான உரிமை"** பிரிவில் அதிக எண்ணிக்கையிலான புகார்கள் பெறப்பட்டன.
- இதைத் தொடர்ந்து குடும்ப வன்முறை புகார்கள் பெறப்பட்டன.

NCW பற்றி

- **இது தேசிய மகளிர் ஆணையச் சட்டம், 1990 இன்** கீழ் சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- **உருவாக்கம் – ஜனவரி 1992**
- **குறிக்கோள்** – வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சமத்துவம் மற்றும் சமமான பங்களிப்பை அடைய வழிவகை செய்வதை நோக்கிப் பாடுபடுதல்.
- **தலைவர் – ரேகா சர்மா.**

## முதல்வரின் தாயுமானவர் திட்டம்

- முன்னோடித் திட்டமான முதல்வரின் தாயுமானவர் திட்டம் சென்னை மற்றும் நாகப்பட்டினத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.
- இத்திட்டம் 2024–25 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில பட்ஜெட்டில் முதலில் அறிவிக்கப்பட்டது.
- இலக்கு – **சுமார் ஐந்து லட்சம் ஏழைக் குடும்பங்களை இரண்டு ஆண்டுகளுக்குள் வறுமையிலிருந்து மீட்டெடுப்பது.**

## குறிப்பு

- மாநிலங்களில் வறுமை விகிதத்தில் **4.89%** உடன் தமிழ்நாடு **நான்காவது இடத்தில்** உள்ளது.
- தமிழ்நாட்டில் வறுமைக் கோடு – 880 (கிராமப்புறம்) மற்றும் 937 (நகர்ப்புறம்).

## 'நடந்தாய் வாழி காவிரி' திட்டம்

- தேசிய நதி பாதுகாப்பு இயக்குநரகம் (NRCD) சமீபத்தில் 'நடந்தாய் வாழி காவிரி' திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ₹934.3 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- இது காவிரி ஆற்றின் பாதுகாப்பு மற்றும் புத்துயிர் பெறச் செய்வதற்காக தமிழக அரசால் முன்மொழியப்பட்ட திட்டமாகும்.
- முதற்கட்டத்தில், மேட்டூர் அணையின் கீழ்பகுதியிலிருந்து திருச்சி வரையிலான பகுதிகளை இந்த திட்டம் உள்ளடக்கி உள்ளது.
- இரண்டாம் கட்டத்தில் திருச்சி முதல் பூம்புகார் வரை ஆற்றின் மீதமுள்ள பகுதிகளை உள்ளடக்கும்.

குறிப்பு

- பூம்புகார் காவிரி கடலுடன் சங்கமிக்கும் இடமாகும்.
- NRCD என்பது **ஜல் சக்தி அமைச்சகத்தின்** ஒரு பிரிவாகும்.

## மக்காச்சோளம் சாகுபடி

- 18 மாவட்டங்களில் மக்காச்சோளம் சாகுபடி பரப்பை அதிகரிக்க ₹30 கோடி செலவில் தமிழக அரசு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவித்தார்.
- நிலப்பரப்பை 50,000 ஹெக்டேர் அதிகரிக்க **50,000 விவசாயிகளுக்கு** உயர்தர மக்காச்சோள விதைகள், இயற்கை மற்றும் திரவ உரங்கள் மற்றும் யூரியாவுடன்கூடிய உபகரணங்கள் விநியோகிக்கப்படும்.

குறிப்பு

- **2024–25 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறையின் செயல் திட்டத்தின்படி, தினை சாகுபடி பரப்பை 9.95 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.**
- **2024–25ல் மொத்த உணவு தானிய உற்பத்தி இலக்கு 129.63 லட்சம் மெட்ரிக் டன் ஆகும்.**

## பெரும்பாலை அகழாய்வு

- தமிழ்நாடு தொல்லியல் துறை சமீபத்தில் 'பெரும்பாலையில் அகழ்வாராய்ச்சிகள் 2022' என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையை **எஸ்.பரந்தாமன் மற்றும் ஆர். வெங்கட குரு பிரசன்னா** ஆகியோர் தயாரித்தனர்.
- இங்கு கண்டுபிடிக்கப்பட்ட பானை ஓடுகளில் கிராஃபிட்டி குறிகள் "வடிவியல் குறியீடுகளை ஒத்திருக்கும்" என்று இந்த அறிக்கை கூறியது.
- மேலும் அடையாளம் தெரியாத செப்பு நாணயம் மற்றும் செப்பு மணியும் கண்டுபிடிக்கப்பட்டது.

குறிப்பு

- **கொங்குமண்டல சதகம்** என்பது விஜய மங்கலத்தைச் சேர்ந்த **கார்மேக கவிராயரின்** 13ஆம் நூற்றாண்டு இலக்கியப் படைப்பாகும். இது என்பது பெரும்பாலையை கொங்கு மண்டலத்தின் வடக்கு எல்லை என்று குறிப்பிடுகிறது.
- பெரும்பாலை **நாகாவதி (பண்டைய பாலாறு) கரையில்** அமைந்துள்ளது. இது காவிரி ஆற்றின் கிளை நதிகளில் ஒன்றாகும்.

## தமிழ் மொழி தியாகிகள் தினம்

- தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் எம்.பி.சாமிநாதன், 2025ஆம் ஆண்டு முதல் **ஜனவரி 25ஆம் தேதி 'தமிழ் மொழி தியாகிகள் தினமாக** அனுசரிக்கப்படும் என்று அறிவித்தார்.
- மேலும், **ஜூன் 3–ம்** தேதி முன்னாள் முதல்வர் மற்றும் திமுக தலைவர் மு.கருணாநிதியின் பிறந்தநாள் **செம்மொழி நாள் விழாவாக** கொண்டாடப்படும் என்றும் அவர் அறிவித்தார்
- பிற அறிவிப்புகள்
    - அரு.அழகப்பன், ராமலிங்கம், சொ. சத்தியசீலன், மா. ரா. அரசு, பாவலர் சா. பாலசுந்தரம், கா. பா.அரவாணன், க. தா. திருநாவுக்கரசு, ரா.குமாரவேலன், மற்றும் கவிஞர் க. வேழவேந்தன் போன்ற புகழ்பெற்ற தமிழ் அறிஞர்களின் படைப்புகள் ₹91,35,000 செலவில் தேசிய மயமாக்கப்படும்

வெற்றி I.A.S. கல்வி மையம்

- 'முத்தமிழ் அறிஞர் கலைஞர்' விருது நிறுவப்பட்டு, தமிழ் மொழி வளர்ச்சிக்கு பங்களிப்பவர்களுக்கும், பாடுபடுபவர்களுக்கும் வழங்கப்படும்.
- சிவகங்கை மாவட்டத்தில் கவிஞர் முடியரசனுக்கு சிலை அமைக்கப்படும்.

## பள்ளிக்கல்வித்துறை முன்னெடுப்புகள்

- பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சட்டப்பேரவையில் பள்ளிக் கல்வி தொடர்பாக பல அறிவிப்புகளை வெளியிட்டார். அவை,
- அரசு பள்ளிகளில் **உயர்தர ஆய்வகங்களை** மேம்படுத்த ₹58 கோடி ஒதுக்கப்பட்டது.
- அரசு உதவி பெறும் பள்ளிகளில் உயர்தர ஆய்வகங்கள் அமைக்க ₹42 கோடி ஒதுக்கப்பட்டது.
- ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான பெண் குழந்தைகளுக்கு உடல், உணர்வு மற்றும் சமூக இடையூறுகளில் இருந்து அவர்களைப் பாதுகாக்கும் முயற்சியில் இணையத்தைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தக் கற்பிக்க புதிய **அகல்விளக்கு முன்முயற்சியின் கீழ்** ஆசிரியர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்படும்.
- மாற்றுத்திறனாளி குழந்தைகளின் உணர்திறன், அறிவுசார் திறன்கள் மற்றும் தசை திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ₹3.80 கோடியில் **உணர்திறன் பூங்காக்கள்** உருவாக்கப்படும்.

## தமிழகம் முழுவதும் முக்கிய பிரபலங்களின் சிலைகள்

- தமிழகம் முழுவதும் முக்கிய பிரபலங்களின் **சிலைகள் அமைக்கப்படும்.** என்று தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் எம்.பி. சாமிநாதன் அறிவித்தார்.அவையாவன
  - ராணி வேலு நாச்சியார்
  - மருது சகோதரர்கள்
  - இந்திரா காந்தி – முன்னாள் பிரதமர்
  - சர். ஜான் ஹூபர்ட் மார்ஷல் – சிந்து சமவெளி நாகரிகத்தின் ஹரப்பா மற்றும் மொஹஞ்சதாரோ தளங்களின் அகழ்வாராய்ச்சியில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்.
  - பர்த்தலமேயு சீகன்பால்கு – இவர் 1713 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு அச்சகத்தை கொண்டு வந்து புனித பைபிளின் தமிழ் மொழிபெயர்ப்பை அச்சிட்டார்.
  - ஜி.டி. நாயுடு
  - சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்.
  - வை. நாடிமுத்துப்பிள்ளை
  - சி.முத்துசாமி – இவர் காவிரி மீட்பு குழுவின் ஒரு பகுதியாக இருந்தார்

## கள்ளக்குறிச்சி துயரச் சம்பவம்

- கள்ள சாராயத்தை உட்கொண்டதால் சுமார் 50 பேர் இறந்தனர் மற்றும் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த துயர சம்பவம் குறித்து விசாரிக்க உயர்நீதிமன்ற முன்னாள் **நீதிபதி பி.கோகுல்தாஸ்** தலைமையில் ஒரு நபர் ஆணையத்தை தமிழக அரசு அமைத்துள்ளது.
- இந்த மரணத்திற்குக் **மெத்தனால்** காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது
- உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (ஆல்கஹால் பானங்கள்) விதிமுறைகள் 2018 வெவ்வேறு மதுபானங்களில் அதிகபட்சமாக அனுமதிக்கப்பட்ட மெத்தனால் அளவைக் குறிப்பிடுகிறது.
- தமிழ்நாடு மெத்தனால் விநியோகத் தடைச் சட்டம் 1937 மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## சாதிவாரி கணக்கெடுப்பு

- மக்கள் தொகை கணக்கெடுப்புடன் **ஜாதிவாரி கணக்கெடுப்பு** நடத்த மத்திய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலினால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011

குறிப்பு

- **புள்ளியியல் சேகரிப்புச் சட்டம், 2008ன் கீழ்,** மாநிலம் சாதி அடிப்படையிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தலாம், மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டம் அதை மீறலாம்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டத்தின் பிரிவு 3, மத்திய அரசு மட்டுமே மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த முடியும் என்று கூறுகிறது.
- மத்திய பட்டியலில் உள்ள நுழைவு 69 இன் கீழ் மக்கள் தொகை கணக்கெடுப்பு உள்ளது.
- சாதி அடிப்படையிலான தரவுகளை சேகரிக்க **குலசேகரன் ஆணையம்** டிசம்பர் 7, 2020 அன்று அமைக்கப்பட்டது.

## சுற்றுச்சூழல் தன்னார்வத் தொண்டுக்கான இணையதளம்

- இந்த புதிய **இணையதள** முன்முயற்சி தமிழக அரசால் தொடங்கப்பட உள்ளது.
- **வாழ்விட பாதுகாப்பு, கடற்கரையை சுத்தம் செய்தல் மற்றும் கழிவு மேலாண்மை** போன்ற நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடுத்துவதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதற்கட்டமாக, இத்திட்டம் சோதனை அடிப்படையில் தொடங்கப்பட உள்ளது.

## ஓசூரில் புதிய சர்வதேச விமான நிலையம்

- **ஓசூரில் சர்வதேச விமான நிலையம்** அமைக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்தார்.
- இது 2,000 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ளது .

குறிப்பு

- தமிழ்நாடு சட்டமன்றத்தின் விதி 110ன் கீழ் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

## தமிழ்நாடு திறன்–நிறைப்பள்ளிகள் முன்முயற்சி

- **தமிழ்நாடு திறன்–நிறைப்பள்ளிகள் முன்முயற்சியை** தொடங்குவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- இத்திட்டம் ₹100 கோடி செலவில் தொடங்கப்பட உள்ளது.
- **நான் முதல்வன் திட்டத்தின் தொடர்ச்சியாக** இத்திட்டம் செயல்படும்.
- நோக்கம் – வேலை தேடும் பட்டதாரிகளின் திறன்களை மேம்படுத்துதல்.
- நான் முதல்வன் திட்டத்தை பாரா மெடிக்கல் படிப்புகளுக்கும் நீட்டிப்பதாக தமிழக அரசு அறிவித்தது.

**நான் முதல்வன் திட்டம் பற்றி**

- தொடக்கம் – **மார்ச் 2022.**
- நோக்கம் – மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் சுமார் **10 லட்சம் இளைஞர்களை திறன்களுடன்** மேம்படுத்துதல்.

## WE-SAFE திட்டம்

- **தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தை** (WE–SAFE) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார்.
- இத்திட்டம் **அடுத்த ஐந்து ஆண்டுகளில் (2024–29)** ₹1,185 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.
- **இத்திட்டம் உலக வங்கியின் உதவியுடன்** செயல்படுத்தப்படும்.
- குறிக்கோள் – முறைசாரா மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரித்து **2030க்குள் 1 டிரில்லியன் டாலர்** பொருளாதாரத்தை அடைதல் .
- இத்திட்டம் முதற்கட்டமாக **எட்டு மாவட்டங்களில்** செயல்படுத்தப்படும்.

## தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், 1937

- **தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், 1937ல்,** தண்டனைகள் கடுமையாக்கப்படும் வகையில், திருத்தம் செய்யப்படும் என, சட்டசபையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.
- இச்சட்டம் தமிழ்நாடு மாநிலத்தில் போதையூட்டும் மதுபானங்கள் மற்றும் போதைப்பொருட்களின்

வெற்றி I.A.S. கல்வி மையம்

உற்பத்தி, விற்பனை மற்றும் நுகர்வு ஆகியவற்றின் தடையை அறிமுகப்படுத்தி நீட்டிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

குறிப்பு

- **ஆபரேஷன் கஞ்சா வேட்டை-4.0** – கஞ்சா கடத்தலின் சட்டவிரோத அச்சுறுத்தலைத் தடுக்க ஏப்ரல் 30, 2023 இல் தொடங்கப்பட்டது.
- **தமிழ்நாடு மாநில மாநில கழகம் (டாஸ்மாக்) 1983** இல் மது விற்பனையை ஒழுங்குபடுத்தவும், சட்டவிரோத மதுபானங்களைக் கட்டுப்படுத்தவும் நிறுவப்பட்டது.

## ஸ்டார்ட்–அப்கள் பற்றிய அறிவிப்புகள்

- மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளால் நடத்தப்படும் ஸ்டார்ட் அப்களை ஆதரிக்க **சிறப்பு புத்தாக்க நிதி** அறிமுகப்படுத்தப்படும் என்று குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்தார்.
- **தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம்** (StartupTN) மூலம் பயனாளிகள் அடையாளம் காணப்படுவார்கள்.

பிற அறிவிப்புகள்

- கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் ₹1.5 கோடி செலவில் **மண்டல புத்தொழில் மையங்கள்** நிறுவப்படும்.
- 1 கோடி செலவில் **உலகளாவிய புத்தொழில் ஒருங்கிணைப்பு மையங்கள்** சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவில் நிறுவப்படும்
- தொழில் நயம் – ஸ்டார்ட்–அப்களின் வடிவமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு வடிவமைப்பு ஸ்டுடியோ நிறுவப்படும்.
- ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு சந்தை அணுகல் மற்றும் வலையமைப்புகளின் வாய்ப்புகளை உருவாக்க தமிழ்நாடு ஸ்டார்ட் அப் திருவிழாவின் இரண்டாம் பதிப்பு மதுரையில் நடைபெறும்.

## ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் (SUP) பொருட்கள்

- அக்டோபர் 2022 முதல் மார்ச் 2024 வரை உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு அமலாக்க நடவடிக்கைகளில் மொத்தம் 116.178 டன் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக **தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்** (TNPCB) தெரிவித்துள்ளது.
- பொதுமக்கள் துணிப்பைகளுக்கு மாறுவதை ஊக்குவிக்கும் வகையில், கோயம்பேடு சந்தை உட்பட 174 **இடங்களில் மஞ்சப்பை–விற்பனை இயந்திரங்களை** TNPCB நிறுவியது.

குறிப்பு

- **ஜூலை 1, 2022** முதல் SUP பொருட்களை மத்திய அரசு தடை செய்தது
- **ஜனவரி 1, 2019** முதல் SUP பொருட்களை தமிழக அரசு தடை செய்தது.
- **மீண்டும் மஞ்சப்பை இயக்கம்** – பொதுமக்களின் துணிப் பைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் 2021 இல் தொடங்கப்பட்டது.

வெற்றி I.A.S. கல்வி மையம்